25

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25
1 III 1959
03-57
MADRAS

தென்னாட்டு வாசகம்

நான்காம் வகுப்பு

TB
031(4)
N59.
147823

...டுப்பதிப்பகம்.
சென்னை-1

தென்னாட்டு வாசகம்

நான்காம் வகுப்பு

25/3-59

ஆசிரியர்கள் :
புலவர். மா. நன்னன்
M. R. சந்திரசேகரன், B.A., L.T.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUL 1959
MADRAS

[Paper used : 34 lbs. White Printing]

தென்னாட்டுப் பதிப்பகம்
16, பிராட்வே : : சென்னை-1

பதிப்புரிமை] 1959 [விலை 80 ந.பை.

முதற் பதிப்பு—நவம்பர், 1958
இரண்டாம் பதிப்பு—ஜூன், 1959

600 008
14823

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 13-5-1959, Page 21]

TB
631(4)
N59

Kabeer Printing Works, Madras (4024)

முன்னுரை

'தென்னாட்டு வாசகம்' என்னும் பெயரிய இப்பாடப் புத்தகம் அரசின் புதிய பாடத்திட்டத்தை முற்றி லும் தழுவி அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தையுள்ளத்தினியல்பு, குழந்தைகளின் இயல் பான கைத்திறன், இயற்கையறிவு, பொருளறிவு, மொழித் திறன் ஆகியவற்றை உட்கொண்டும், படிப்படியாகவும், இயல்புக்கு முரண்படாமலும், வளர்ச்சிக்கு வாய்ப்பளித் தும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அறிந்தவற்றிலிருந்து அறியாதனவற்றிற்கு ஆர்வம் குன்றாமல் அழைத்துச் செல்லல் எனும் சீரிய இயல்புமுறையும் இந்நூலில் அமைந்திருத்தல் உணரக்கூடும்.

மொழிப் பாடத்தில் மொழியறிவுக்கு முதலிடமும் பொருளறிவு முதலிய பிறவற்றிற்கு அடுத்த அடுத்த இடங் களும் நல்குதல் இன்றியமையாதது. எனவே, மொழிப் பாடத்தில் மொழிப் பயிற்சிகள் மிகுதியாகத் தரப்படுவது இன்றியமையாததாகும். இந்நூலில் பயிற்சிகள் வேண் டிய அளவு கொடுக்கப்படாமல் இயன்ற அளவே கொடுக் கப்பட்டுள்ளன. ஆதலின், கற்பிக்கும் ஆசிரியர்கள் அவை போன்ற வேறு பயிற்சிகளை மிகுதியாகக் கொடுத் தால் மொழிப் பாடத்தின் நோக்கம் முற்றிலும் ஈடேறுவது திண்ணம்.

நான், சென்னை அரசில் தமிழாசிரியராக அலுவல் புரியும்போது இந்நூல் எழுதப்பெற்றது; ஆயினும் இஃது அரசின் வெளியீடன்று.

மா. நன்னன்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தமிழ் நாடு	...	1
2.	தமிழ் நாடு வாழ்க (பாட்டு)	...	5
3.	யானையை அழித்த தவளை	...	6
4.	உறையூர்	...	9
5.	செத்த பாம்பை அடிக்கும் வீரன் (பாட்டு)	...	13
6.	மூட்டை விடவில்லை	...	16
7.	ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு	...	20
8.	காக்கை (பாட்டு)	...	23
9.	நாட் குறிப்பு	...	24
10.	பேராசைப் பெருங்கேடு	...	27
11.	கிள்ளவேண்டும் முளையிலே (பாட்டு)	...	30
12.	கடிதம் வரைதல்	...	31
13.	ஈயும் எறும்பும்	...	35
14.	நெஞ்சு பொறுக்குதில்லை (பாட்டு)	...	38
15.	இன்பச் செலவு	...	39
16.	பழிக்குப் பழி	...	43
17.	போ போ போ ; வா வா வா (பாட்டு)	...	46
18.	தமிழ்த் தென்றல்	...	47
19.	அறிவுள்ள எதிரி	...	51
20.	உடல் நலம் பேணல் (பாட்டு)	...	54
21.	பட்டுப் பூச்சி	...	55
22.	பார்வைக் குருவி	...	59
23.	நிலா (பாட்டு)	...	62
24.	நுண்மதி	...	63
25.	அதியமான்	...	66
26.	பனை (பாட்டு)	...	69
27.	ஞமலி போல் வாழேல்	...	70
28.	வாழும் வழி	...	73
29.	மூன்று மூடர்கள் (பாட்டு)	...	76
30.	கஞ்சனும் வஞ்சனும்	...	77
31.	நூற்றாண்டு விழா	...	80
32.	அரசைத் துறந்த அடிகள் (நாடகம்)	...	84
	செய்யுட் பகுதி	...	88

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா,
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா,
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய, ஜய ஹே!

—ரவீந்திரநாத தாகூர்

பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன;
நின் புகழைப் பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

தென்னாட்டு வாசகம்

நான்காம் வகுப்பு

1. தமிழ் நாடு



நமது தாய்மொழி தமிழ். தமிழ் மொழியைப் பேசும் நாம் அனைவரும் தமிழர்கள். நமது தாய்நாடு தமிழ் நாடு. இது இந்திய நாட்டின் தென்பகுதியில் உள்ளது. பண்டைக் காலத்தில் தமிழ்நாடு மிகப் பெரிய நிலப்பரப்பாய் விரிந்து இருந்தது. அதில் சில பகுதிகள் கடலில் மூழ்கிவிட்டன. வடக்கே வேங்கடமும், தெற்கே குமரி முனையும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் தமிழ் நாட்டின் எல்லைகள் என்பார்கள். எனினும், ஆந்திரம், கேரளம் என்ற தனி நாடுகள் ஏற்பட்டதன் மூலம் தமிழ் நாட்டின் சில பகுதிகள் பிரிக்கப்பட்டன. எனவே இப்போது தமிழ்,

நாடாக எஞ்சியுள்ளது சில மாவட்டங்கள் கொண்ட ஒரு நிலப் பரப்பேயாகும்.

பண்டைத் தமிழ் நாடு மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சேரர், சோழர், பாண்டியர் என்ற முப்பெரும் வேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது. இவர்கள் தவிர, வேறு பல குறுநில மன்னர்களும் ஆங்காங்கு ஆண்டு வந்தனர். சேரருக்குத் தலைநகராய் வஞ்சியும், சோழருக்குத் தலைநகராய்க் காவிரிப்பூம் பட்டினமும், பாண்டியருக்குத் தலைநகராய் மதுரை மாநகரும் விளங்கின. அவர்கள் முறையே வில், புலி, கயல் ஆகிய அடையாளங்களைத் தத்தம் கொடிகளில் பொறித்திருந்தனர். சேர அரசர்களுள் செங்குட்டுவன் புகழ் பெற்றிருந்தான். அவனது தம்பி இளங்கோ அடிகள் ஒரு சிறந்த புலவர். அவர் இயற்றியதே 'சிலப்பதிகாரம்' என்ற நூல். சோழர்களுள் கரிகால் வளவன், இராசராச சோழன் ஆகியோர் புகழ்பெற்ற மன்னர்களாவர். தஞ்சைப் பெரிய கோயில் இராசராசன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இம்மன்னர் சிற்பக் கலையில் அதிகக் கவனம் செலுத்தினர். பாண்டியருள் நெடுஞ்செழியன் சிறந்து விளங்கினன். இம்மன்னர்கள் தத்தம் நாட்டு மக்களிடம் பெரிதும் அன்பு செலுத்தி ஆட்சி புரிந்தனர்; கற்றோர் அனைவரையும் ஆதரித்தனர்; நீதி தவறாத வேந்தர்களாய் இருந்தனர்.

பண்டைத் தமிழர் கல்வியிலும், வீரத்திலும் சிறந்து வாழ்ந்தனர். ஆண்களைப் போலவே பெண்களும் கற்றுத் தேர்ந்து புலவர்களாய் விளங்கினர். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், அவர்களிடம் பெரிதும் காணப்பட்டன. அவர்கள் கலங்கள் மூலம் கடல் கடந்து மேனாடுகளுக்கும், கீழ்நாடுகளுக்கும் சென்று வாணிபம் செய்தனர்; தமிழ் நாகரிகத்தினை எங்கும் பரப்பினர்.

" செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று தமிழ் நாட்டைப் பற்றிப் பாரதியார் பாடியுள்ளார். கல்வி, வீரம், ஒழுக்கம் ஆகியவற்றில் மேம்பட்டவர்களே நம் முன்னோர்கள். நாம் அவர்களின் மரபில் தோன்றியவர்கள். எனவே, நம் பழம் பெருமைகளை நாம் காக்க முற்படவேண்டும். நம் நாடும், மொழியும் பண்டைச் சிறப்பினை அடைய நாம் பாடுபடவேண்டும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. பண்டைத் தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
2. தமிழ் நாட்டின் முப் பிரிவுகளையும், அவற்றின் தலைநகரங்களையும் கூறு.
3. மூவேந்தர்களின் கொடிகள் யாவை?
4. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
5. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவர் யார்?
6. நமது பழம் பெருமைகளுள் சிலவற்றைக் கூறு.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுது :

1. நமது —— தமிழ் நாடு.
2. தமிழ் நாடு —— —— தென் பகுதியில் உள்ளது.
3. வஞ்சி —— தலைநகரம்.
4. சோழரது தலைநகரம் ——.
5. பாண்டியர் —— அடையாளமுள்ள கொடியை உடையவர்கள்.
6. சேர அரசர்களுள் —— புகழ் பெற்றவன்.

3. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

விரிந்து, எஞ்சியுள்ளது, ஆங்காங்கு, முறையே, இயற்றியது, விளங்கினான், நீதி தவறாத, முற்பட வேண்டும்.

4. சொற்களைப் பிரித்து எழுதுதல் :

தத்தம் = தம் + தம்

பொறித்திருந்தனர் = பொறித்து + இருந்தனர்

கீழுள்ள சொற்களையும் மேற்கண்டபடி பிரித்து எழுது.

மேனாடுகள், எஞ்சியுள்ளது, நிலப்பரப்பு, பகுதிகளாக, ஆங்காங்கு.

5. சேர்த்து எழுதுதல் :

விரிந்து + இருந்தது = விரிந்திருந்தது

வேந்தர்கள் + ஆல் = வேந்தர்களால்

கீழுள்ள சொற்களையும் மேற்கண்டபடி சேர்த்து எழுது.

பெற்று	+	இருந்தான்
மன்னர்கள்	+	ஆவர்
கட்டப்பட்டது	+	ஆகும்
வேந்தர்கள்	+	ஆய்
கிழக்கு	+	நாடுகள்

6. இப்பாடத்தின் இரண்டாம் பத்தியில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் எடுத்து எழுது.

7. கீழுள்ள தொடர்களைப் படித்துப் பார் ; பொருத்தமான இடங்களில் முற்றுப் புள்ளியும் (.) வினாக்குறியும் (?) இடு.

காவிரி தமிழ் நாட்டில் ஓடும் ஆறு அது எங்கே தோன்றுகிற தென்று உனக்குத் தெரியுமா அதற்குப் பொன்னி என்று வேறொரு பெயரும் இருக்கிறது அந்த ஆறுதான் நமக்கு உணவு தருகிறது எப்படித் தெரியுமா அதன் நீரைப் பாய்ச்சி நெல் விளைவிக்கிறோம் அதனால் நமக்கு வேறு நன்மைகள் உண்டா

8. தமிழ் நாட்டில் சேலம், கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய மாவட்டங்கள் வழியாகக் காவிரி ஓடுகிறது.

மேலுள்ள தொடரில் (,) இவ்வாறு இடப்பட்டிருக்கும் குறிக்குக் காற்புள்ளி என்று பெயர். இப்புள்ளி இடப்பட்டுள்ள இடங்களில் கண் இமைக்கும் நேரம் நிறுத்திப் படிக்க வேண்டும். முற்றுப்புள்ளி, வினாக்குறி முதலியவை உள்ள இடங்களில் காற்புள்ளிக்கு நிறுத்துவதைப்போல் நான்கு பங்கு நேரம் நிறுத்திப் படிக்கவேண்டும். இனி, நீங்கள் படிக்கும்போது, இவற்றைக் கவனித்துத் தகுந்தபடி நிறுத்திப் படியுங்கள்.

2. தமிழ் நாடு வாழ்க! (பாட்டு)

வீரத்தில் நிறைவான தமிழ்நாடு வாழ்க!
வித்தைக்கு உறைவான தமிழ்நாடு வாழ்க!
சூரத்தின் துணையான தமிழ்நாடு வாழ்க!
துஷ்டர்க்குப் பணியாத தமிழ்நாடு வாழ்க! 1

கொல்லாமை உயர்வென்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடைவள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறமென்னும் தமிழ்நாடு வாழ்க! 2

—நாமக்கல், வெ. இராமலிங்கம் பிள்ளை

பயிற்சி

கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

வீரம், வாழ்க, துணையான, பணியாத, கொல்லாமை, வள்ளல், இல்லாமை, இரவாமை.

3. யானையை அழித்த தவளை



கொடுமனூர்க் காடு மிகவும் அடர்த்தியானது; அங்கு மலைகளும் இருந்தன. அதனால் அக் காட்டில் யானைகள் கூட்டங் கூட்டமாய் வாழ்ந்தன. அக் கூட்டங்களுக் கெல்லாம் ஓர் ஆண் யானை அரசனாக விளங்கியது. அதன் பெயர் புன்னாகம் என்பதாகும். அது பிறந்து ஐம்பது ஆண்டுகள் ஆயின. மேலும் அது கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக யானை அரசாக வீற்றிருந்தது.

ஒருநாள் அக் காட்டில் வாழ்ந்த யானைகளெல் லாம் ஒன்று கூடின; தங்கள் அரசனாகிய புன்னாகத் தின் ஐம்பத்தோராவது பிறந்த நாளையும், அது பட்டத்திற்கு வந்த இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவையும் சேர்த்து மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவது என்று முடிவு செய்தன. பிறகு அவை தங்களின் முடிவைத் தம்மரசனிடம் அறிவித் தன. அதைக் கேட்ட புன்னாகமும் மகிழ்ந்து அதற்கு இணங்கியது.

குறிப்பிட்ட நாளில் அக் காடெங்கும் விழாக் கொண்டாடப்பட்டது. யானைகள் மட்டுமல்லாமல் அக் காட்டில் வாழ்ந்த பிற விலங்குகளும், பறவை களும் அக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தன. அன்று மாலையில் அக் காட்டிலிருந்த விலங்குகளும், பறவைகளும் ஓரிடத்தில் கூடின. புன்னகத்தை அழைத்து வந்து நடுவில் நிறுத்தின ; அதனைப் பன்னீரால் கழுவிச் சந்தனம் பூசின ; பட்டாடைகள் உடுத்தின ; மலர் மாலைகளும் சூட் டின. பற்பல பரிசுகளையும் அதற்கு வழங்கின. ஆடலும் பாடலும் செய்து அதற்கு மகிழ்ச்சியூட்டின. இறுதியாகப் புன்னகம் தனது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவிப்பதற்காகப் பேசத் தொடங் கியது.

அவ் விழா நடந்துகொண்டிருந்த இடத்திற்கு அருகில் ஒரு சிறு குட்டை இருந்தது. அதில் பல தவளைகளும் இருந்தன. அவைகளை யாரும் அவ் விழாவுக்கு அழைக்கவில்லை. அதனால் அத் தவளை கள் வருத்தமும் பொறுமையும் கொண்டன ; அரச யானை பேசத் தொடங்கியதும் ‘ தணதண ’ என்று ஒலி எழுப்பின. யானை ஒன்று அங்கு வந்து எவ் வளவோ எடுத்துச் சொல்லியும் தவளைகள் அமைதி யாக இருக்கவில்லை ; மேலும், “ உங்கள் அரசனையே அழித்துவிடுவோம், ” என்றும் கூறின. அதைக் கேட்ட புன்னகம் சிரித்துவிட்டுத் தன் பேச்சைப் பேசி முடித்தது.

அன்று இரவு நிலா வெளிச்சத்தில் புன்னகம் உலாவிக்கொண்டிருந்தது. அது அக்குட்டையின் அருகில் வந்ததும் தன் அழகிய உருவம் குட்டை நீரில் தெரிவதைப் பார்த்தது. அதனைக் கண்டு கண்டு களித்துக் கொண்டிருந்தது. அப்போது கரையிலிருந்த தவளையொன்று குட்டையில் தத்திக் குதித்தது ; நீர் கலங்கியது ; யானையின் உருவம்

மறைந்தது. அதனுல் ஏமாற்றமடைந்த யானை வருத்தமுடன் திரும்பும்போது அத் தவளை, "யானை அரசே" என்று அழைத்தது. புன்னுகம் திரும்பிப் பார்த்தது.

அதனைக் கண்ட தவளை, "உன்னை அழித்தேனு இல்லையா?" என்றது. புன்னுகத்திற்கு ஒன்றும் புரியவில்லை; "என்னையா? நீயா? அழித்தாயா?" என்று கேட்டது. அதற்கு அத் தவளை, "நீ வேறு, உன் உருவம் வேரு?" என்று கேட்டுக்கொண்டே நீரில் மறைந்தது. புன்னுகமும் குனிந்த தலை நிமிராமல் நழுவி விட்டது.

பயிற்சி

1. விடை எழுது :

1. யானைகள் ஒன்று கூடி செய்த முடிவு யாது?
2. விழா நாள் மாலையில் நடந்த நிகழ்ச்சிகள் யாவை?
3. தவளைகள் எப்பொழுது ஒலியெழுப்பின? ஏன்?
4. புன்னுகம் எதைக் கேட்டுச் சிரித்தது?
5. தவளை யானையை அழித்தது எவ்வாறு?

2. தொடரில் அமைத்து எழுது :

கூட்டங் கூட்டமாய், வீற்றிருந்தது, ஆண்டு நிறைவு விழா, சிறப்பித்தன, சூட்டினுன், உலாவுதல், குனிந்த தலை நிமிராமல்.

3. பிரித்து எழுது :

உலாவிக்கொண்டிருந்தது, கரையிலிருந்த, ஏமாற்றமடைந்த, இருபத்தைந்து, காடெங்கும், மட்டுமல்லாமல், ஓரிடத்தில், பட்டாடைகள், பற்பல.

4. உறையூர்

உறையூர், திருச்சியில் உள்ள மலைக்கோட்டைக்குச் சிறிது தொலைவில் அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். இவ்வூர் பழம்பெருமை வாய்ந்தது. முற்காலத்தில் சோழ வேந்தர்களின் தலைநகராக விளங்கியது. இது காவிரியாற்றின் கரையில் அமைந்துள்ளது. நீர்வளமும், நிலவளமும் பொருந்தியது. 'ஊரிற் சிறந்தது உறையூர்' என்னும் பழமொழியால் இவ்வூரின் சிறப்பினை உணரலாம். இவ்வூரினைப் பற்றிய வரலாற்றுக் கதையொன்று உண்டு.

சோழ நாட்டு வேந்தனாகிய கரிகால் வளவன் இளம் வயதிலேயே முடிசூடி ஆட்சி புரிந்து வந்தான். அவனது புகழும், வீரமும் கடல் கடந்து வெளிநாடுகளிலும் பரவி இருந்தன. ஒரு சமயம் கரிகாலன் நாட்டு வளத்தைப் பெருக்க எண்ணி, காவிரியின் இருபுறமும் கரைகட்டும்படி, தன் அமைச்சர் மூலமாக ஏற்பாடு செய்தான். ஒழுங்கான கரை அமைந்த பின்னர் மன்னன் அதனை நேரில் காண்பதற்குத் தனது பட்டத்து யானைமீது ஏறிச் சென்றான். அமைச்சரும், ஏவலாளரும், பாதுகாப்பாளரும் அரசனைப் பின் தொடர்ந்து சென்றனர்.

கரிகாலன் சென்ற வழியெல்லாம் மக்கள் அவனை வரவேற்று வாழ்த்தினர். இறுதியில் மன்னன் காவிரிக் கரையை அடைந்தான். அன்னை காவிரியையும் அதற்கு அமைந்த புதிய கரைகளையும் கண்டு மகிழ்ந்தான். பின்னர் மேலும் சிறிது தூரம் யானைமீது செல்லும்போது ஒரு சேவல் எதிர்ப்பட்டது. அது பட்டத்து யானைமுன் ஓடிவந்து படபடவெனச் சிறகை அடித்துக் கழுத்து மயிரைச் சிலிர்த்தது; யானையின் காலை மாறி மாறிக் கொத்தியது. திடீரெனச் சேவல் வந்து, தனது காலைக் கொத்தியதால் யானை திடுக்கிட்டு நின்றது. அதன் காலில் இரத்தம்

கசியத் தொடங்கியது. அங்கிருந்தவர்கள் சேவலைத் துரத்தினர். பிறகு அது ஓடி மறைந்துவிட்டது.



கரிகாலன் பட்டத்து யானையை விட்டுக் கீழே இறங்கினான். யானையைச் சேவல் கொத்தியதற்காக அவன் வருந்தவில்லை; சினமும் கொள்ளவில்லை. அவனுக்கு வியப்புதான் மேலிட்டது. ''சின்னஞ் சிறு சேவலுக்குப் பெரிய யானையை எதிர்க்கும் அளவு ஆண்மை இருக்கிறதே! இந் நிகழ்ச்சி இவ்வூரின் தனிச் சிறப்பையல்லவா விளக்குகிறது? இவ்வூரில் வாழ்வோரும் வீரம் செறிந்தவர்களாகவே இருக்க வேண்டும். ஆகவே, இதனை நாம் நம் தலைநகராக்கிக் கொள்ளுதல் நன்றாகும்'' என்று எண்ணினான். இந் நிகழ்ச்சி நிகழ்ந்த ஊரே உறையூராகும். சில நாட்களில் அவ்வூரில் மாடமாளிகைகளும், அரண்களும் அமைக்கப்பட்டன. உறையூர் சோழ வேந்தனின் தலைநகராக ஆகியது. இவ்வூரினைக் கோழியூர் என்றும் அழைப்பர். இது பொருத்தமான பெயரல்லவா?

பயிற்சி

1. விடை எழுது:

1. உறையூர் எங்கே இருக்கிறது?
2. நாட்டு வளத்தைப் பெருக்கக் கரிகாலன் என்ன ஏற்பாடு செய்தான்?
3. யானையின் முன் வந்த சேவல் என்ன செய்தது?
4. சேவல் யானையை எதிர்த்ததைக் கண்ட கரிகாலன் என்ன எண்ணினான்?
5. உறையூரின் வேறு பெயரென்ன? அதற்கு ஏன் அப் பெயர் வந்தது?

2. கீழ்க்காணும் சொற்களை உன் சொந்தத் தொடர்களில் அமைத்து எழுது:

விளங்கியது, பரவி இருந்தன, ஏற்பாடு செய்தான், வாழ்த்தினர், திடுக்கிட்டு, வியப்பு, ஆண்மை, செறிந்தவர்கள், நிகழ்ச்சி, பொருத்தமான.

3. பிரித்து எழுது:

சிற்றூர், அமைந்துள்ளது, கதையொன்று, வழியெல்லாம், திடீரென.

4. சேர்த்து எழுது:

சிறு	+	எறும்பு
நடந்தது	+	உண்டு
கழுதை	+	எங்கே
யானை	+	ஓட்டி
படார்	+	என

5. கீழுள்ள சொற்களைக் கவனி:

1	2
அரசன்	உறையூர்
கரிகாலன்	யானை
அமைச்சர்	காவிரியாறு
அரசி	சேவல்

முன் பக்கத்தில் உள்ள பெயர்ச் சொற்களைக் கவனித்தாயா? அவை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளன. முதல் வரிசையில் உள்ள பெயர்களுக்கும், இரண்டாவது வரிசையிலுள்ள பெயர்களுக்கும் ஏதேனும் வேறுபாடு தெரிகிறதா? முதல் வரிசையில் உள்ளன வெல்லாம் மக்களின் பெயர்கள். மக்களைக் குறிப்பனவற்றை உயர்திணை என்பர். மற்ற உயிர் உள்ள பொருள்களையும், உயிர் இல்லாத பொருள்களையும் குறிப்பனவற்றை அஃறிணை என்பர்.

பின்வரும் பெயர்களை உயர்திணையாகவும், அஃறிணையாகவும் பிரித்து எழுது.

செங்குட்டுவன், முயல், மரம், வீரன், எலி, கல், எழிலி, அழகன், விறகு, வேலன், நெருப்பு, பொன்னம்மாள், எருமை, அமைச்சர்.

6. கீழுள்ள சொற்களைக் கவனி:

1	2	3
அவன்	அவள்	அவர்கள்
வந்தான்	வந்தாள்	வந்தார்கள்
படித்தான்	படித்தாள்	படித்தார்கள்

மேலேயுள்ளவற்றில் முதல் பிரிவில் உள்ள சொற்கள் அனைத்தும் ஆண்களைக் குறிக்கின்றன. இரண்டாம் பிரிவில் உள்ள சொற்கள் பெண்களையும், மூன்றும் பிரிவில் உள்ள சொற்கள் ஆண், பெண் என்றில்லாமல் பல பேரையும் குறிக்கின்றன. ஆணைக் குறிக்கும் சொல்லை ஆண்பால் என்றும், பெண்ணைக் குறிக்கும் சொல்லைப் பெண்பால் என்றும், பலரைக் குறிக்கும் சொல்லைப் பலர்பால் என்றும் கூறுவர்.

பின்வரும் சொற்களை ஆண்பால், பெண்பால், பலர்பால் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து எழுது.

தூங்குகிறாள், ஓடுகிறான், வருகிறார்கள், பாடுகிறான், சாப்பிடுகிறாள், தூங்குகிறார்கள், மக்கள், செல்வி, பணக்காரன், படித்தவர்கள், வேலைக்காரன், கடைக்காரி.

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்று உயர்திணைக்கு மூன்று பால்கள் உண்டு என்பதை நினைவில் பதியவை.

5. செத்த பாம்பை அடிக்கும் வீரன்
(பாட்டு)

ஆட்டுக்குட்டி தேடப்போனேன்—சந்தமாமா
அடிக்கப்போனேன் கடிக்கவந்தது சந்தமாமா !
நேத்துச் செத்த சாரைப் பாம்பை—சந்தமாமா
நேராகக்கண் டடிச்சுப் போட்டேன்—சந்தமாமா !
ரெண்டாட்டுக்கு எட்டுக்காலு—சந்தமாமா
என், பெண்டாட்டியைக் கேட்டுப்பாரு-சந்தமாமா!
எட்டு, நாளைக்குமுன் செத்தப் பாம்பை-சந்தமாமா, நான்
எட்ட நின்று குத்திப் போடுவேன்—சந்தமாமா !
வத்திக் கிடக்கிற ஏரியைக் கண்டால்—சந்தமாமா, நான்
வளைஞ்சு வளைஞ்சு நீச்ச மடிப்பேன்—சந்தமாமா!
உயிராயிருக்கிற பாம்பைக் கண்டால்—சந்தமாமா
ஒரு, காதம் போய்க் காதம்வருவேன்-சந்தமாமா, நான்

செத்துக் கிடக்கிற பாம்பைக் கண்டால்–சந்தமாமா, நான்
சில்லாக் கோலால் குத்திப்போடுவேன்–சந்தமாமா!
மூணு கோழிக்கு ஆறுகாலு—சந்தமாமா
பெட்டைக் கோழி முட்டையிடும்—சந்தமாமா !

—நாடோடிப் பாடல்.

பயிற்சி

1. கீழுள்ள கொச்சையான சொற்களுக்கு ஏற்ற திருத்தமான சொற்களை எழுது :

   நேத்து, அடிச்சுப் போட்டேன், ரெண்டு, வத்தி, வளைஞ்சு, குத்திப் போடுவேன்.

2. கீழுள்ள சொற்கள் எந்தத் திணையைச் சேர்ந்தவை ?

1	2
மரம்	மரங்கள்
புலி	புலிகள்
கல்	கற்கள்
குருவி	குருவிகள்

மேலுள்ள இரு பிரிவுகளுக்கும் உள்ள வேறுபாட்டைக் கவனி. முதல் பிரிவிலுள்ள பெயர்கள் ஒவ்வொரு பொருளையும், இரண்டாம் பிரிவிலுள்ள பெயர்கள் ஒன்றுக்குமேற்பட்ட பொருள்களையும் குறிக்கின்றன. எனவே, அவற்றை முறையே ஒன்றன் பால் என்றும், பலவின் பால் என்றும் கூறுவர்.

அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என இருவகைகள் உண்டு என்பதை நினைவில் வை.

3. காடுகள், புலி, தென்னாலி ராமன், வடிவாம்பாள், விழுந்தார்கள், படுத்தான், ஆடுவாள், வெட்டுகிறார்கள், மேய்கிறது, குரைக்கின்றன, கூவும், கத்துகின்றன, மனிதர்கள், தகப்பனார், தாயார்.

முன் பக்கத்திலுள்ள சொற்களைக் கீழுள்ள கட்டங்களில் பொருத்தமான இடங்களில் எடுத்து எழுது :

	ஆண் பால்	பெண் பால்	பலர் பால்	ஒன்றன் பால்	பலவின் பால்
1					
2					
3					

மூன்றும் வகுப்பில் ஒருமை, பன்மை என்பவற்றைக் கற்றிருப்பாய்? அவற்றிற்கு எண் என்று பெயர்.

4. கீழுள்ள கட்டங்களில் உள்ள வெற்றிடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்பு :

	ஒருமை	பன்மை
1		வந்தோம்
2	செத்தது	
3		பறவைகள்
4	கிளி	
5		நீங்கள்

6. மூட்டை விடவில்லை

கோடைக்கால வெயில் கடுமையாக இருந்தது. ஆறு, ஏரி, கிணறு முதலிய நீர் நிலைகள் வறண்டு கிடந்தன. ஆடு மாடுகள் மேய்ச்சல் கிடைக்காமல் தவித்தன. ஆற்று மணலில் ஊற்றுத் தோண்டி நீர் எடுத்துக் குடித்தனர் மக்கள். திடீரென்று ஒரு நாள் மேற்கே பெருமழை பெய்தது. மழையுடன் புயலும் வீசியது. அதனால் வெள்ளாற்றில் பெரிய வெள்ளம் வந்தது. அது ஆற்றின் ஓரங்களிலிருந்த ஊர்களை யெல்லாம் அழித்தது.

வெள்ளப் பெருக்கில் பலவகையான பொருள் களும் அடித்துச் செல்லப்பட்டன. ஆடு, மாடுகளும் நீரில் மிதந்துகொண்டே சென்றன. புயலால் விழுந்த தென்னை, வாழை, மா முதலிய மரங்களும், அவற்றின் குலைகளும் ஆற்று வெள்ளத்தில் மிதந்து சென்றன. கூரை வீடு ஒன்று ஓடம்போல் ஆடி ஆடிச் சென்றுகொண்டிருந்தது.

வெள்ளாற்றின் தென் கரையில் கள்ளிப்பாடி என்று ஓர் ஊர் இருக்கிறது. அவ்வூரில் நீட்டோலை என்ற பெயருடைய ஒருவன் இருந்தான். அவன் நீந்துவதில் வல்லவன். ஆற்று வெள்ளத்தில் தெப்பம் விடுவது அவனது தொழில். அன்று வெள்ளம் கரை புரண்டு சென்று கொண்டிருந்ததால் தெப்பம் விட முடியவில்லை. அதனால் அவன் மேட்டுக்கரையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆற்று வெள்ளத்தில் மிதந்து செல்லும் பொருள்களை நீட்டோலை பார்த்தான்; உடனே அவன் தனது வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு ஆற்று வெள்ளத்தில் குதித்தான். கைக்குக் கிட்டிய பொருள்களை எல்லாம் இழுத்துக் கொண்டுவந்து கரையேற்றினான். அப்போது வெள்ளத்தின் நடுவில் கன்னங்கரேல் என்று ஒரு பெரிய மூட்டை மிதந்து செல்வதைக் கண்டான். நீட்டோலையின் ஆவல் அதிகமாயிற்று; நீரில் குதித்து நீந்திச் சென்று அரும்பாடுபட்டு அம் மூட்டையைப் பிடித்துக்கொண்டான். ஆனால் அதனைக் கரைக்கு இழுத்து வர முடியாமல் அவன் தத்தளித்தான்.

கரையில் நின்றுகொண்டிருந்த மற்றவர்கள் அவனைக் கூவியழைத்து, "ஏன் தவிக்கிறாய்," என்று கேட்டார்கள். அதற்கு நீட்டோலை, "மூட்டையை இழுக்க முடியவில்லை," என்றான். "முடியாவிட்டால் மூட்டையை விட்டுவிடு; நீயாவது கரைக்கு வந்து சேர்," என்று கரையிலிருந்தவர்கள் கூறினர். அதனைக் கேட்ட நீட்டோலை, "மூட்டையை நான் விட்டு விட்டேன்; மூட்டைதான் என்னை விடவில்லை," என்று தட்டுத் தடுமாறித் தண்ணீர் குடித்துக்கொண்டே கூறினான். அவன் கூறியதன் பொருள் அவர்களுக்குச் சிறிதும் புரியவில்லை.

இதற்குள் வெள்ளம் அவனை நெடுந் தொலைவு கிழக்கே அடித்துக்கொண்டு சென்றுவிட்டது.

கரையிலிருந்தவர்களும் கிழக்கு நோக்கி ஓடிக் கொண்டேயிருந்தனர். சற்று நேரத்தில் நீட்டோலை இறந்து கை, கால்களை நீட்டிக்கொண்டு மிதப்பதைக் கண்டனர். உடனே மூட்டைபோல் காணப்பட்ட கரடி அவனது உடல்மேல் ஏறி உட்கார்ந்து கை, கால்களை உதறிக்கொண்டு கரையிலிருந்தவர்களை உற்றுப் பார்த்தது.

பயிற்சி

1. விடை எழுது :

1. வெள்ளாற்றில் ஏன் வெள்ளம் வந்தது ?

2. வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பொருள்கள் யாவை ?

3. எப்போது நீட்டோலையின் ஆவல் அதிகமாயிற்று ?

4. நீட்டோலை தண்ணீர் குடித்துக்கொண்டே என்ன கூறினான் ?

5. "மூட்டை என்னை விடவில்லை" என்று நீட்டோலை கூறியதன் பொருள் என்ன ?

2. கீழுள்ள சொற்களைக் கவனி :

1	2	3
நான்	நீ	அவன்
நாம்	நீர்	அவள்
நாங்கள்	நீங்கள்	அவர்
உண்கிறேன்	படிக்கிறாய்	அது
போகிறோம்	ஆடுகிறீர்கள்	அவைகள்
நடக்கிறோம்	கேட்கிறீர்கள்	பாடுகிறார்கள்

முதல் பிரிவில் உள்ளவை ஒரு கருத்தைப் பேசுகின்றவர்களைக் குறிக்கின்றன. இரண்டாம் பிரிவில் உள்ளவை முன்னின்று கேட்பவரைக் குறிக்கின்றன. மூன்றாம் பிரிவில் உள்ளவை யாரைப் பற்றி அல்லது எதைப்பற்றிப் பேசப்படுகிறதோ அவரை அல்லது அதைக் குறிக்கின்றன. இவற்றை முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என்று கூறுவர். இவை மூன்றுக்கும் இடம் என்று பெயர்.

சமைக்கிறேன், நீ, முத்தழகன், கடிக்கின்றன, நாட்கள், அவைகள், நீங்கள், எழுதுகிருய், பாடுகிறீர்கள், மேய்கிறது, கூவுகிறது, அடிக்கிருய், கத்துகிருய், வைக்கிறேன்.

மேற் கண்ட சொற்களைக் கீழ்க் கண்டபடி மூன்று இடங்களாகப் பிரித்து எழுது :

	தன்மை	முன்னிலை	படர்க்கை
1.			
2.			
3.			
4.			
5.			

7. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒவ்வோராண்டிலும் ஆகஸ்டுத் திங்கள் பதினைந் தாம் நாளில் பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் விழாக் கொண்டாடுகிறோம் அல்லவா ? அன்று ஏன் விழாக் கொண்டாடுகிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமா ?

முன்பு நம்முடைய நாட்டை ஆங்கிலேயர் ஆண்டு வந்தனர். அவர்கள் வெளிநாட்டுக்காரர்கள். ஆதலால் அவர்கள் நம்முடைய நல்மையைக் கவனிக்கவில்லை. அதனால் அவர்களிடமிருந்த ஆட்சியைக் கைப்பற்றி நாமே ஆளவேண்டும் என்று காந்தியடிகள் கூறினர். அவர் கூறியபடியே அரும் பாடுபட்டு ஆங்கிலேயரிடமிருந்த ஆட்சியைக் கைப் பற்றி நாமே ஆளத் தொடங்கினோம். அந்த நாள் தான் ஆகஸ்டுப் பதினைந்து.

இங்கிலாந்து என்ற நாட்டைச் சேர்ந்த ஆங்கி லேயர்கள் முற்காலத்தில் நம் ஆட்சியை எப்படிக்

கைப்பற்றினுர்கள் என்று தெரியுமா? நமது நாட்டில் ஆண்டு வந்த அரசர்கள் அனைவரும் வலிமையுடையவர்களே. எனினும், அவர்கள் அனைவரும் ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அதனுல் ஆங்கிலேயர்களால் அவர்களை எளிதில் வெல்ல முடிந்தது.

நீங்கள் மயில் இறகுகளைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அவை மிகவும் இலேசானவை. ஒரு கட்டு மயிலிறகைக்கூட நீங்கள் எளிதில் தூக்கிவிடலாம். அத்தகைய மயிலிறகுகளை ஒருவர் வண்டியில் ஏற்றுகிருர். வண்டியில் உள்ள அச்சு எதனுல் செய்யப்பட்டது என்று உங்களுக்குத் தெரியுமா? அது இரும்பினுல் செய்யப்பட்டது. அது மிகவும் பளுவாக இருக்கும்; வலிமையாகவும் இருக்கும்.

மயில் தோகையை வண்டியில் ஏற்றியதால் உறுதியான வண்டி அச்சு ஒடிந்துவிடுமா? ஒடியாது என்றுதான் நீங்கள் கூறுவீர்கள். இதைப்பற்றி ஒரு புலவர் கூறுவதைக் கவனியுங்கள். "வண்டி அச்சு இரும்பினுல் செய்யப்பட்டு மிகவும் உறுதியாக இருக்கிறது. அது மிகுந்த சுமையையும் தாங்கும். மயில் தோகையோ மிகவும் இலேசானது. ஆனுல் அளவில்லாமல் மயில் தோகையை வண்டியில் ஏற்றிக்கொண்டேயிருந்தால் உறுதியான அச்சும் ஒடிந்துவிடும்," என்கிருர் அவர். நமது அரசர்கள் ஒற்றுமையாக இருந்திருந்தால் ஆங்கிலேயர் ஆட்சி நம் நாட்டில் ஏற்பட்டிருக்காது. அவர்கள் எவ்வளவு வலிமையுடையவர்களாக இருந்தாலும் தோற்றிருப்பார்கள் என்பது இப்போது விளங்குகிறதல்லவா? ஆகவே, நாம் அனைவரும் ஒன்றுபட்டு இருந்தால் நமக்கு நல்வாழ்வு உண்டு. இல்லாவிட்டால் நாம் அனைவரும் தாழ்ந்து அழிய நேரிடும்.

இந்த நல்ல கருத்தை நமக்குக் கற்பித்தவர் திருவள்ளுவர் என்ற பெரியார் ஆவர். அவர் இரண்

டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு புலவர். திருக்குறள் என்னும் ஓர் ஒப்பற்ற நூலை நமக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கிருர். நீங்கள் மேல் வகுப்புக்களில் திருக்குறளைப் படிப்பீர்கள்.

பயிற்சி

1. விடை எழுது :

1. நாம் ஏன் ஆகஸ்டுப் பதினைந்தாம் நாளைக் கொண்டாடுகிருேம்?

2. ஆங்கிலேயரிடமிருந்த ஆட்சியை நாம் ஏன் கைப்பற்றினோம்?

3. ஆங்கிலேயரிடம் நம் அரசர்கள் தோற்றதேன்?

4. திருவள்ளுவர் ஒற்றுமையைப் பற்றி எவ்வாறு விளக்கியுள்ளார்?

2. தொடரில் அமைத்து எழுது :

ஒன்றுபட்டு, நேரிடும், ஒப்பற்ற, இலேசானது, உறுதியான, ஆட்சி, கொண்டாடுகிருேம், கைப்பற்றினேன்.

3. பிரித்து எழுது :

அவர்களிடமிருந்து, வலிமையுடையவர்கள், ஒற்றுமையின்றி, ஒருவரோடொருவர், இருக்கிறீர்களல்லவா, மயிலிறகு.

4. சேர்த்து எழுது :

எங்களிடம் + இருந்த   வலிமை + உடையவன்
பார்த்தீர்கள் + அல்லவா   கண்டு + இருந்தால்

5. திணை, பால், எண், இடம் கூறு :

		திணை	பால்	எண்	இடம்
1.	கண்ணகி	உயர்திணை	பெண்பால்	ஒருமை	படர்க்கை
2.	அரசன்				
3.	யானைகள்				
4.	குயில்				
5.	வீரர்கள்				
6.	நான்				
7.	நீங்கள்				
8.	படிக்கிருர்கள்				
9.	ஔவையார்				
10.	அதியமான்				

8. காக்கை (பாட்டு)



காக்கை யிடத்திலுள்ள ஒற்றுமை கண்டு,—நீ
வாழ்க்கை நடத்திஞல் நன்மை உண்டு
ஆக்கிய சோறு கொஞ்சம் சிந்திக் கிடக்கும்!—காக்கை
அழைத்துத் தன் இனத்தொடு குந்திப் பொறுக்கும். 1

காக்கையை ஒருபையன் கொன்றுவிட்டதால்–அதைக்
காக்கைகள் அத்தனையும் கண்டு விட்டதால்
கூக்குரல் இட்டபடி குந்தி வருந்தும்!—அதைக்
கொன்ற பையன் கண்டுதன் நெஞ்சு வருந்தும். 2

வரிசையில் குந்தியந்தக் காக்கைகள் எல்லாம்—நல்ல
வரிசை கெட்ட மக்களின் வாழ்க்கைகள் எல்லாம்
பெருங்கேலி யாய் மிகவும் பேசிஇருக்கும்—அதன்
பின்பவைகள் தத்தமிடம் நோக்கிப் பறக்கும். 3

—புரட்சிக் கவிஞர்.

பயிற்சி

விடை எழுது :

1. சாக்கையிடம் உள்ள நல்ல குணம் யாது?
2. காக்கைகள் எப்போது கூக்குரலிட்டுக் கத்தும்?
3. காக்கைகள் எதைக் கேலி செய்யும்?

9. நாட் குறிப்பு

பிள்ளைகளே! ஒவ்வொரு நாளிலும் நடக்கும் நிகழ்ச்சிகளனைத்தையும் நினைவில் வைத்துக் கொள்ளுதல் அரிதல்லவா? எனவே, அவைகளை நாம் சுருக்கமாக எழுதி வைத்தல் வேண்டும். இம் மாதிரி தினசரி நிகழ்ச்சிகளை எழுதி வைத்தலுக்கு 'நாட் குறிப்பு' என்று பெயர். நாட் குறிப்பினால் நமக்குத் தேவையான சமயங்களில் முன் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி சுலபமாக அறிய முடிகிறது. ஆகவே, நாட்குறிப்பு எழுதுதல் மிகவும் அவசியமாகும். நீங்கள் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். நாட் குறிப்பிற்கென்றே தனியாக ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக் கொள்ளுதல் நல்லது. அதில் தேதி வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாய்க் குறிப்புக்கள் எழுதிவர வேண்டும்.

கேசவன் தேசீயப் பள்ளியில் நான்காம் வகுப்பில் படிக்கிறான். அவனது நாட் குறிப்பின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அவனைப் போலவே நீங்களும் நாட்குறிப்பு எழுதக் கற்றுக் கொள்ளுங்கள்.

22-5-1958 (வியாழக்கிழமை):

பள்ளியில் தேர்வின் முடிவு அறிவிக்கப்பட்டது. நான் தேர்ச்சியடைந்ததற்காக வீட்டில் அனைவரும் மகிழ்ந்தனர். அப்பா எனக்கு ஒரு பேனாவைப் பரிசாக வழங்கினார்.

23-5-1958 (வெள்ளிக்கிழமை):

கடும் வெயில். அனற் காற்று வீசியது. பகலில் வெளியே செல்வதற்கு அஞ்சி வீட்டிலேயே அடைபட்டிருந்தேன். மாலையில் அக்காவுடனும் அம்மாவுடனும் கடற்கரைக்குச் சென்று வந்தேன்.

24-5-1958 (சனிக்கிழமை):

கடைத்தெருவுக்குப் போகும் வழியில் ஒரு கிழவர், வாழைப்பழத் தோல் சறுக்கி விழுந்துவிட்டார். நான் ஓடிப்போய்க் கிழவரைத் தூக்கி உதவி செய்தேன். கிழவர் என்னை வாழ்த்தினர்.

மாலையில் நானும் என் அப்பாவும் படக் காட்சிக்குச் சென்று வந்தோம்.

25-5-1958 (ஞாயிற்றுக்கிழமை):

மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மாலையில் காந்தி நினைவு மண்டபத்திற்கு நண்பன் மணியுடன் சென்றேன். அங்குப் பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. பல பெரியார்கள் வந்திருந்தனர். கூட்டம் முடிந்தவுடன் மழை பிடித்துக் கொண்டது. மழையில் நனைந்து கொண்டே வீடு வந்து சேர்ந்தோம்.

26-5-1958 (திங்கட்கிழமை):

ஊரிலிருந்து மாமா எழுதிய கடிதம் வந்தது. என்னை அங்கு வரச்சொல்லி எழுதியிருந்தார். இரவு கோயமுத்தூருக்குப் புறப்பட்டேன்.

பயிற்சி

1. விடை எழுது:

1. நிகழ்ச்சிகளை ஏன் குறித்து வைக்க வேண்டும்?
2. நாட் குறிப்பு என்று எதற்குப் பெயர்?
3. கேசவன் இரக்கமுள்ளவன் என்று எவ்வாறு தெரிகிறது?
4. கேசவன் என்று கோயமுத்தூருக்குப் புறப்பட்டான்?
5. உன் பள்ளியில் நடந்த ஏதாவதொரு கொண்டாட்டத்தைப் பற்றி நாட் குறிப்பெழுது.

2. கீழுள்ள வினைச் சொற்களைக் கவனி :

நடந்தேன்	நடக்கிறேன்	நடப்பேன்
படித்தேன்	படிக்கிறேன்	படிப்பேன்
கண்டேன்	காண்கிறேன்	காண்பேன்

இப் பிரிவுகளில் உள்ள பொருள் வேறுபாட்டை உன்னால் கண்டு பிடிக்க முடிகிறதா ? முதல் பிரிவில் உள்ள வினைச் சொற்கள் முன்பு செய்யப்பட்ட தொழிலைக் குறிக்கின்றன. இரண்டாம் பிரிவில் உள்ளவை இப்போது செய்யப்படும் தொழிலையும், மூன்றும் பிரிவில் உள்ளவை இனிமேல் செய்யப்போகும் தொழிலையும் குறிக்கின்றன. இவைகளை முறையே இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று கூறுவர்.

கீழுள்ள வினைச் சொற்களைப் பிரித்து முக்காலம் காட்டும் கட்டங்களில் தனித்தனியாக எழுது :

எழுதுவேன், உடைக்கிறேன், துவைப்பேன், அடுக்கினேன், கட்டினுன், ஆளுகிருர், ஆண்டார், வருவார், படிக்கிறேன்.

	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1			
2			
3			
4			
5			
6			

3. விடுபட்ட இடங்களை நிரப்பு :

	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1	பாய்ந்தது	......	......
2	......	விழுகிருன்	......
3	......	......	வருவார்
4	கட்டினுன்	......	......
5	......	......	கூவும்
6	......	பாடுகிருள்	......

10. பேராசைப் பெருங்கேடு

செல்வன் ஒருவன் ஒரு பணப்பையுடன் மாடு வாங்க வேற்றூருக்குச் சென்றுன். பணப்பையில் நூறு ரூபாய்கள் இருந்தன. அவன் சென்ற சமயம் அவனது தேவைக்கேற்ற மாடுகள் கிடைக்கவில்லை. எனவே, அவன் பிறகு வாங்கிக் கொள்ளலாமென்று தன் ஊருக்குத் திரும்பினுன்.

வரும் வழியில் வெயில் கடுமையாக இருந்ததால், அவனுக்குக் களைப்பு மேலிட்டது; தாகமும் அதிகமா யிருந்தது. எங்கும் குடிப்பதற்கு நீர் கிடைக்கவில்லை. தள்ளாடித் தள்ளாடி வீடு வந்து சேர்ந்தான். அவன் சோர்வுடன் திரும்பி வந்ததனுல், வரும் வழியில் பணப்பையைக் கைதவறி எங்கோ போட்டுவிட்டான். வீட்டிற்கு வந்த பிறகுதான் பணப்பை தவறி விட்டதை அறிந்தான். மறுபடியும் தான் வந்த வழியே சென்று தேடிப் பார்த்தான். ஆயினும் பணப்பை அவன் கண்ணில் படவில்லை. அது பற்றி அவன் மிக்க கவலை கொண்டான்; பணப்பையைத் தேடித் தருபவருக்குப் பத்து ரூபாய் இனும் தருவதாகப் பறை யறைவித்தான்.

செல்வன் சென்ற சிறிது நேரத்தில் அவ்வழியே வந்த ஓர் ஏழைக் குடியானவரிடம் அப்பணப்பை கிடைத்தது. பணப்பையைப்பற்றிப் பறை சாற்றிய தைக் கேள்விப்பட்டதும் அக்குடியானவர் பையை எடுத்துச் சென்று செல்வனிடம் கொடுத்தார். செல் வன் அதனை ஆவலுடன் வாங்கித் திறந்து பார்த் தான். அதில் தான் வைத்த பணம் நூறு ரூபாயும் அப்படியே இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி கொண் டான். எனினும் பறை சாற்றியபடி ஏழைக் குடியான வருக்குப் பத்து ரூபாய் தர அவன் மனம் ஒப்ப வில்லை. குடியானவரை எப்படியேனும் ஏமாற்றிவிட வேண்டுமெனச் செல்வன் மனத்தில் திட்டமிடத் தொடங்கினுன்.

குடியானவர், தனக்குப் பத்து ரூபாய் தரும்படி செல்வனைக் கேட்டார். அதற்குச் செல்வன், ''நான் இந்தப் பையில் நூற்றுப் பத்து ரூபாயல்லவா வைத்திருந்தேன். நீ அதில் ஏற்கனவே பத்து ரூபாயை எடுத்துக் கொண்டு நூறு ரூபாய் மட்டுமல்லவா கொண்டு வந்து கொடுத்திருக்கிறாய். மறுபடியும் உனக்கு ஏன் பத்து ரூபாய் கொடுக்க வேண்டும்?'' என்று அதட்டிக் கேட்டான்.

குடியானவர் தன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியைக் கேட்டுத் திகைத்தார். அவ்வூர்த் தலைவ



ரிடம் சென்று முறையிட்டார். ஊர்த் தலைவர், பையிழந்தவனை வரவழைத்து விசாரித்தார்; அவன் கூறுவதில் உண்மை சிறிதும் இல்லை என்பதை உணர்ந்தார். ''உமது பையில் நூற்றுப் பத்து ரூபாய் இருந்ததாக நீர் கூறுகிறீர். குடியானவரோ பணப்பையைக் கண்டெடுத்து அப்படியே கொண்டு வந்து சேர்த்ததாகக் கூறுகிறார். அவர் பத்து ரூபாயை

மட்டும் எடுத்துக் கொண்டார் என்பது பொருத்த மாகத் தெரியவில்லை. எனவே, நூறு ரூபாய் கொண்ட இந்தப் பை உம்முடையதாக இருக்காது. இது வேறு ஒருவருடையதாகத் தான் இருக்கும். இதனுடைய சொந்தக்காரரர் யார் என்று தெரியுமட்டும் குடியானவ ரிடமே இப்பணப்பை இருக்கட்டும். நூற்றுப் பத்து ரூபாய் அடங்கிய பை கிடைத்தால் அதை நீர் பெற்றுக் கொள்ளலாம்,'' என்று ஊர்த்தலைவர் செல்வனைப் பார்த்துக் கூறினர்.

பேராசை கொண்ட செல்வன் கையில் கிடைத்த பொருளையும் இழந்து ஏமாற்றமடைந்தான். செல்வன் ஊர்த்தலைவரின் உத்தரவுக் கிணங்கக் குடியானவ ரிடம் பணப்பையைக் கொடுத்துவிட்டு வெறுங்கை யுடன் வீடு திரும்பினன். உண்மை பேசிய குடியான வர் நூறு ரூபாய் பெற்று மகிழ்ச்சியடைந்தார்.

பயிற்சி

1. விடை எழுது :

1. செல்வன் மாடு வாங்காமல் திரும்பியதேன்?
2. பணப்பையை இழந்த செல்வன் என்ன செய்தான்?
3. இனம் கேட்ட குடியானவருக்குச் செல்வன் கூறிய விடை என்ன?
4. ஊர்த்தலைவர் அந்த வழக்கில் என்ன முடிவு கூறினர்?
5. செல்வன் ஏன் ஏமாற நேரிட்டது?

2. தொடரில் அமைத்து எழுது :

தேவைக்கேற்ற, மேலிட்டது, தள்ளாடித் தள்ளாடி, பறை யறைவித்தார், அப்படியே, திட்டம்.

3. பிரித்து எழுது :

வேற்றூர், தேவைக்கேற்ற, வேண்டுமென, நூற்றுப்பத்து, கண்டெடுத்து, பேராசை.

4. கீழுள்ள தொடர்களில் தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருள் மாருத வேறு சொற் களை அமைத்து எழுது :

1. குடியானவருக்குச் செல்வர் இனம் தர மறுத்தார்.
2. குடியானவர் பையைக் கண்டெடுத்தார்.
3. அவன் கூறுவதில் உண்மை சிறிதும் இல்லை.
4. அதை நீர் பெற்றுக் கொள்ளலாம்.
5. பேராசை கொண்ட செல்வன் ஏமாற்றமடைந்தான்.

11. கிள்ளவேண்டும் முளையிலே!

(பாட்டு)

சின்னப் பாப்பா தன்னை நாம்
சேர்த்தணைத்துத் தூக்கலாம்;
நன்கு வளர்ந்த மனிதனை
நம்மால் தூக்க முடியுமோ?
கன்றுக் குட்டி தன்னை நாம்
கட்டிப் பிடித்து நிறுத்தலாம்;
நன்கு வளர்ந்த காளையை
நம்மால் அடக்க முடியுமோ?
சின்னச் செடியை எளிதிலே
சிரம மின்றிப் பிடுங்கலாம்;
நன்கு வளர்ந்த மரத்தினை
நம்மால் அசைக்க முடியுமோ?
வளர விட்டு எதையுமே
வசப் படுத்தல் சிரமமே;
எளிது அல்ல; ஆதலால்,
இதனை நாமும் உணர்ந்துமே,
கெட்ட செய்கை யாவையும்
கிள்ள வேண்டும் முளையிலே.
விட்டோ மானல் வளரவே
மிகுந்த சிரமம் ஆகுமே!

—அழ. வள்ளியப்பா.

பயிற்சி

கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுது:

1. ——— எளிதாகத் தூக்கலாம்.
2. நம்மால் ——— ——— முடியாது.
3. சின்னச் செடியை எளிதாகப் ———.
4. ——— ——— முளையிலேயே கிள்ளி விட வேண்டும்.
5. நமது கெட்ட குணங்களை ——— ——— கூடாது.

12. கடிதம் வரைதல்

முற்காலத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செய்தி யனுப்ப வேண்டுமானால் ஆள் மூலமே அனுப்ப இயலும். பல நாட்கள் நடந்தோ அன்றி விலங்குகள் மீது சவாரி செய்தோ குறிப்பிட்ட இடம் சென்று அந்த ஆள் செய்தியை அறிவிப்பார். இக்காலத்தில் மிகக் குறைந்த செலவில் செய்தியை வெளியூர்களுக்கு அனுப்பி விடலாம். நாம் எழுதும் கடிதங்களை ஆங்காங்குக் கொண்டு சேர்க்கும் பொறுப்பினை 'அஞ்சல் நிலையம்' ஏற்றுக் கொள்கிறது. விரைந்து செல்லும் ஊர்திகள் மூலம் இக் கடிதங்கள் எடுத்துச் செல்லப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் தொலைவிலுள்ளவர்களுக்கும் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

கடிதம் வரைவதில் சில முக்கிய குறிப்புக்கள் கவனிக்கப்படவேண்டும். நாம் யார் ; நாம் அறிவிக்க விரும்பும் செய்தி யாது ; நாம் யாருக்குச் செய்தியை அறிவிக்க விரும்புகிறோம் ; என்ற விளக்கங்களைக் கடிதத்தில் குறிக்க வேண்டும். நாம் அறிவிக்க விரும்பும் செய்திகளனைத்தையும் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுதவேண்டும். ஆசிரியருக்கு எழுதும் கடிதம், நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எழுதும் கடிதம், வியாபாரிகளுக்கு எழுதும் கடிதம், மேலதிகாரிகளுக்கு எழுதும் கடிதம் எனக் கடிதங்கள் பலவகைப்படும். அவை அனைத்தையும் ஒரே மாதிரியாக வரைய இயலாது. அவரவர்களுக்கு ஏற்ற முறையில் கடிதத்தின் தொடக்கமும், முடிவும் அமையவேண்டும். செய்திகளை அறிவிக்கும் முறையிலும் வேறுபாடு உண்டு.

கீழுள்ள மாதிரிக் கடிதங்களைப் பார்.

I

25, வள்ளுவர் தெரு,
இராயபுரம், சென்னை,
20—9—58.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

ஐயா,

நான் திருமயிலையில் நடைபெறும் எனது தமக்கையாரின் திருமணத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே எனக்கு இன்று முதல் மூன்று நாட்களுக்கு (20–9–58 முதல் 22–9–58 முடிய) விடுமுறை அளிக்கும்படி பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் பணிவுள்ள மாணவன்,
சு. மதிவாணன்.

நான்காம் வகுப்பு ஆசிரியர் அவர்களுக்கு,
கலைப்பள்ளி,
இராயபுரம், சென்னை.

II

திரு. வி. க. பள்ளி,
உறையூர், திருச்சி,
25—9—58.

பொறுப்பாளர் அவர்களுக்கு,
தென்னாட்டுப் பதிப்பகம்,
சென்னை–1.

அன்புள்ள ஐயா,

எமது பள்ளியிலுள்ள மாணவர்களுக்குத் தேவைப்படும் கீழ்க்குறித்துள்ள நூல்கள் ஒவ்வொன்றிலும் 20 படிகள் வீதம் இரயில்வே பார்சலில் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

தென்னாட்டு வாசகம்—நான்காம் புத்தகம்
,, ,, —ஐந்தாம் புத்தகம்

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
கு. அன்பழகன்.

III

18, இளங்கோ தெரு,
சைதாப்பேட்டை, சென்னை–15,
30—9—58.

அன்புள்ள தந்தைக்கு, வணக்கம்.

இங்கு யாவரும் நலம். அங்கு தங்கள் நலத்தை அறிய விரும்புகிறேன். தங்கள் விருப்பப்படி நானும் தம்பியும் நன்றாகப் படித்து வருகிறோம். வகுப்பில் நான் முதல் மாணவனாகவே இருக்கிறேன். நாள்

தோறும் பத்திரிகைச் செய்திகளைத் தவருது படித்து வருகிறேன். ஆசிரியரும் என்னிடம் அன்புடன் இருக்கிருர். அண்மையில் வரப்போகும் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் அதிக மதிப்பு எண்கள் பெறுவேன் என்று நம்புகிறேன்.

தங்களுக்கு விடுமுறை கிடைக்கும்போது ஒரு முறை இங்கு வருமாறு வேண்டுகிறேன். தங்களைக் காண ஆவலாய் இருக்கிரும்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மகன்,
நெ. மணிவண்ணன்.

திருவாளர், சு. நெல்லையப்பர் அவர்களுக்கு
68, தில்லை நகர், திருச்சி.

பயிற்சி

விடை எழுது :

1. கடிதத்தில் என்னென்ன விளக்கங்களைக் குறிக்க வேண்டும்?
2. கடிதங்களில் உள்ள வகைகள் யாவை?
3. உனக்கு உடல் நலம் இல்லாததால் ஒரு நாளைக்கு விடுமுறைவேண்டும் என்று உன் வகுப்பு ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.
4. திருச்சி, பெரிய பிள்ளைத் தெருவில் உள்ள தென்றல் பதிப்பகப் பொறுப்பாளருக்கு உனக்குச் சில புத்தகங்களை அனுப்பச் சொல்லி ஒரு கடிதம் எழுது.
5. நீ பள்ளியில் பரிசுகள் வாங்கியது பற்றி வெளியூரில் படிக்கும் உன் அண்ணனுக்கு ஒரு கடிதம் எழுது.

13. ஈயும் எறும்பும்

நம்பி நான்காம் வகுப்பு மாணவன்; அறிவும் ஒழுக்கமும் உள்ளவன். அவன் ஓய்வு நேரங்களில் தன் தந்தையாருடன் தங்களது வயல்களுக்குச் சென்று வருவது வழக்கம். அவ்வாறு செல்லும் போதெல்லாம் அவன் அங்குக் காண்பவைகளைப் பற்றித் தன் தந்தையாரிடம் கேட்டுக்கேட்டு அறிந்துகொள்வான். வாயை மூடிக்கொண்டு ஊமையைப்போல் செல்வது அவனுக்குப் பிடிக்காது. அவன் ஓயாமல் பேசிக்கொண்டே வருவதைக் கண்டு அவன் தந்தை சிற்சில நேரங்களில் சலிப்படைவதும் உண்டு.

ஒரு நாள் மாலை நேரம்; நம்பி வழக்கம்போல் தனது தந்தையுடன் வயலுக்குச் சென்றான். இருவரும் அங்கிருந்த கரும்புத் தோட்டத்திற்குள் சென்றனர். அப்போது வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேகங்கள் காணப்பட்டன. குளிர்ந்த காற்றும் வீசிக்கொண்டிருந்தது. தோட்டத்தில் சில

இடங்களிலும், வேலியிலும் பூக்கள் பல மலர்ந்திருந்தன. அந்த மகிழ்ச்சி தரும் இன்ப வேளையில் ஈக்கள் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து விளையாடிக் கொண்டிருந்தன. அவை பாடிப்பாடி மகிழ்ந்து பறந்துகொண்டிருந்தன.

அக் காட்சிகளைக் கண்ட நம்பியின் உள்ளமும் மகிழ்ந்தது. ஆனால், அவன் பார்த்த வேறொரு காட்சி அவனது மகிழ்ச்சியை மறக்க வைத்தது. வரப்பின் ஓரத்தில் எறும்புகள் சாரை சாரையாய்ச் சென்றுகொண்டிருந்தன. அவை தமது முட்டைகளையும், நெல், கம்பு, கேழ்வரகு முதலிய தானிய மணிகளையும் எடுத்துக்கொண்டு எங்கோ சென்று கொண்டிருந்தன. தீப் பற்றிக்கொண்ட வீடுகளிலிருந்து மக்கள் தத்தம் பொருள்களை எடுத்துக் கொண்டு வெளியில் ஓடுவதைப்போல் அவை பரபரப்புடன் ஓடிக்கொண்டிருந்தன.

ஈக்களையும், எறும்புகளையும் கண்ட நம்பியின் உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்கள் தோன்றின. உடனே அவன் தன் தந்தையைப் பார்த்து, "அப்பா! இந்த இனிய மாலை வேளையில் ஈக்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கின்றன? ஆனால், எல்லோரும் இன்பமுடன் இருக்கும் இந்த நேரத்தில் எறும்புகள் மட்டும் அமைதியில்லாமல் அலைந்து கொண்டிருப்பது ஏன்?" என்று கேட்டான். அதனைக் கேட்ட நம்பியின் தந்தை சிரித்துக்கொண்டே. "பிறகு சொல்கிறேன்" என்றார். இதற்குள் வானத்தில் மழைக்குறிகள் தோன்றின. தந்தையும் மகனும் விரைந்து வீட்டிற்குத் திரும்பினர்.

அன்று இரவில் பெருமழை பெய்தது; குளம் குட்டைகளிலெல்லாம் நீர் நிறைந்தது; பள்ளமான இடமெல்லாம் வெள்ளமாய்க் காணப்பட்டது. மறு நாள் காலையில் தந்தையும், மகனும் வயலுக்குச் சென்றனர். கரும்புத் தோட்டத்தில் ஈக்கள் கும்பல்

கும்பலாய்ச் செத்துக் கிடந்தன; எறும்புகளில் ஒன்றைக் கூடக் காண முடியவில்லை. நம்பியின் உள்ளம் துன்பத்தால் துடிதுடித்தது; துயரம் நிரம்பிய கண்களுடன் அவன் தன் தந்தையின் முகத்தைப் பார்த்தான்.

அவர் சிரித்துக்கொண்டே பின்வருமாறு கூறினார்: "நம்பி! நேற்று மழை வரும் என்பதை எறும்புகள் முன்னதாகவே அறிந்தன; தக்க ஏற்பாடுகளும் செய்துகொண்டன. அதனால் அவை பாதுகாப்பான மேட்டு நிலத்தில் உள்ள வளைக்குள் இன்பமாக வாழ்கின்றன. முன் எச்சரிக்கையின்றி ஆடிப் பாடித் திரிந்துகொண்டிருந்த ஈக்கள் மழைக்கும், வெள்ளத்திற்கும் இரையாகி மடிந்தன. முன்னறிவும், எச்சரிக்கையும் உடையவர்களே உலகில் வாழ முடியும்.'' நம்பியின் முகத்தில் வியப்பும், தெளிவும் காணப்பட்டன.

பயிற்சி

1. விடை எழுது :

1. நம்பி ஓய்வு நேரங்களில் என்ன செய்வான்?
2. நம்பியின் தந்தை எப்போது சலிப்படைவார்?
3. நம்பியின் உள்ளம் எதைக் கண்டு மகிழ்ந்தது?
4. நம்பியின் மகிழ்ச்சியை மறக்க வைத்த காட்சி எது?
5. நம்பி தன் தந்தையைப் பார்த்து என்ன கேட்டான்?
6. நம்பியின் உள்ளம் ஏன் துன்பத்தால் துடித்தது?
7. நம்பியின் தந்தை சிரித்துக்கொண்டே என்ன கூறினார்?

2. எதிர்ச் சொற்கள் எழுது :

அறிவு, பிடிக்காது, மாலை, குளிர்ந்த, மலர்ந்து, மகிழ்ச்சி, இன்பம், மறக்க வைத்தது, பரபரப்புடன், சிரிப்பு, விரைந்து, நிறைந்தது, பள்ளம், சாவு, தெளிவு.

5. நெஞ்சு பொறுக்குதில்லை (பாட்டு)

நெஞ்சு பொறுக்கு தில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே ;
வஞ்சனைப் பேய்கள் என்பார்—இந்த
மரத்தில் என்பார் ; அந்தக் குளத்தில் என்பார் ;
துஞ்சுவது முகட்டில் என்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார். 1

சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார் ;
துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார் ;
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார் ;
எப்போதும் கை கட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கிநிற்பார். 2

—பாரதியார்

பயிற்சி

விடை எழுது :

1. மக்கள் பேய்களைப் பற்றி என்ன பேசிக் கொள்வார் களாம் ?
2. மக்கள் யார்யாரைக் கண்டு அஞ்சுவார்களாம் ?

15. இன்பச் செலவு

என் பெயர் அழகன். நான் சென்னையில் கலைப் பள்ளியில் நான்காம் வகுப்பில் படிக்கிறேன். ஒரு சமயம் நானும், என் வகுப்பு மாணவர்களும் செஞ்சியைக் காணச் சென்றோம். எங்கள் வகுப்பு ஆசிரியரும் உடன் வந்தார்.

நாங்கள் எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் வண்டியேறித் திண்டிவனத்தில் இறங்கினோம். அங்கிருந்து மோட்டார் மூலம் செஞ்சியை அடைந்தோம். செஞ்சி இப்போது ஒரு சிற்றூராக விளங்குகிறது. இவ்வூருக்குச் சந்திரகிரி, இராசகிரி, கிருட்டிணகிரி என்ற மூன்று மலைகள் இயற்கை அரண்களாக அமைந்துள்ளன. இம்மலைகளை உயரமான மதிற்சுவர்களால் இணைத்துக் கோட்டையொன்று கட்டப்பட்டுள்ளது. சுவர்களைச் சுற்றி ஆழமான அகழி இருக்கிறது. ஆனால், தற்போது மதில்கள் பல இடங்களில் இடிந்து சரிந்துள்ளன. அகழியும் தூர்ந்து கிடக்கிறது. மதில்களுக்கிடையில் சண்டைக் காலங்களில் துப்பாக்கி, பீரங்கி முதலியவற்றை வைத்து எதிரியைச் சுடுவதற்கான கண்ணறைகள் அமைந்துள்ளன. நெருக்கடியான சமயங்களில் வெளியே தப்பிச் செல்வதற்கான கள்ள வழிகளும் ஆங்காங்கு அமைந்துள்ளன.

இங்குள்ள மலைகளில் இராசகிரியே உயரமானது. நாங்கள் முதலில் இராசகிரியை அணுகினோம். அங்கு ஒரு வாயில் உள்ளது. அதன் வழியாக உள்ளே சென்று ஒரு பெருவெளியை அடைந்தோம். அவ்விடத்தில் கலியாண மகால் என்னும் மண்டபம் ஒன்று இருக்கிறது. அது ஏழு அடுக்குகள் கொண்ட ஓர் அழகிய கட்டடம். அக் கட்டடத்தின் மேல் ஏறிச் சுற்றிப் பார்த்தோம்.

கலியாண மகாலுக்கு எதிரில் குதிரைக் கொட்டில்கள் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டுள்ளன. அவைகளுக்கு அருகிலேயே அரண்மனை அந்தப்புரமும், நந்தவனமும் இருந்தன என்று எங்கள் ஆசிரியர் அறிவித்தார். இப்பகுதிக்கு மேற்கே ஒரு குளமும், அதனை அடுத்து ஒரு சிலம்பக் கூடமும் இருக்கின்றன.

சிலம்பக் கூடத்திற்குச் சிறிது தொலைவில் ஒரு பெரிய களஞ்சியத்தைக் கண்டோம். அதில் மூன்று அறைகள் இருக்கின்றன. முற்காலத்தில் அவைகளில் முறையே நெல்லும், கம்பும், சேழ்வரகும் சேமித்து வைப்பது வழக்கமென்றும், போர்க்காலங்களில் அவை மக்களுக்கு வழங்கப்பட்டனவென்றும் அறிந்தோம்.

இராசகிரியின் அடிவாரத்தில் கமலக்கண்ணி அம்மன் கோயிலும், செஞ்சி அம்மன் கோயிலும் உள்ளன. அவற்றையும் பார்த்துவிட்டு மலைமீது ஏறத் தொடங்கினோம். பல படிகள் எறிய பின்னர் மரப்பாலம் ஒன்று குறுக்கிட்டது. மலையின் இரு பகுதிகளை அப்பாலம்தான் இணைத்துள்ளது. அப்பாலம் இல்லையானால் மலையின் மறு பகுதியை அடைய முடியாது. சண்டைக் காலங்களில் பகைவர் வருவதைத் தடுப்பதற்கு அப்பாலத்தை உள்ளே இழுத்துக் கொள்வார்களாம்.

பாலத்தைக் கடந்து செங்குத்தான மலைப் பகுதியை அடைந்தோம். அங்கு அரசரின் ஆலோசனை மண்டபம், நெற் களஞ்சியம், பணக் களஞ்சியம் முதலியவற்றைக் கண்டோம். ஆலோசனை மண்டபத்திற்கு ஒருபுறத்தில் அரங்கநாதர் கோயிலும், சிவன் கோயிலும் இருக்கின்றன. மறு புறத்தில் ஒரு மணிக்கூண்டு உள்ளது. அது மூன்றடுக்குள்ள ஒரு சதுரக் கட்டடம். அதற்கு அண்மையில் ஒரு

சுனையைக் கண்டோம். அவ்வளவு உயரத்தில் அமிழ்தினும் இனிய சுவையுள்ள நீர்ச்சுனையைக் கண்டு வியப்படைந்தோம். அந்நீரை அள்ளி அள்ளிப் பருகினோம். ஆலோசனை மண்டபத்தில் சற்று நேரம் அமர்ந்து இளைப்பாறிய பின்னர், இராச கிரியை விட்டுக் கீழே இறங்கினோம்.

பகல் உணவுக்குப் பின்னர் கிருட்டிணகிரி மீது சென்றோம். அங்கும் அரசரது கொலு மண்டபம், நெற்களஞ்சியம், எண்ணெய்க் கிணறு ஆகியவற் றைக் கண்டோம். எண்ணெய்க் கிணறு இருபகுதி களாக அமைந்துள்ளது. அதன் ஒரு பகுதியில் எண்ணெயும், மற்றொரு பகுதியில் நெய்யும் சேமித்து வைக்க அக்கிணறு பயன்பட்டதாம். கொலு மண்ட பம் மலை உச்சியில் உள்ளது. அது காண்போர் மனத்தைக் கவரும் ஓர் அழகிய மண்டபம். அங்குக் கடுங்கோடையிலும் குளிர்ந்த காற்று வீசும். நாங் கள் கிருட்டிணகிரியை விட்டுக் கீழே இறங்கிய போது கதிரவன் மேற்றிசையில் மறைந்துவிட்டான். உடனே மோட்டாரில் ஏறித் திண்டிவனத்தை அடைந்து சென்னைக்குத் திரும்பினோம்.

இந்த இன்பச் செலவின் மூலம் மலையை அரணா கக்கொண்ட ஒரு கோட்டையின் அமைப்பைக் கண்டு களிக்க முடிந்தது. பண்டை வேந்தரின் அறிவையும், ஆற்றலையும் உணர முடிந்தது.

பயிற்சி

1. விடை எழுது :

1. சென்னையிலிருந்து செஞ்சிக்கு எவ்வாறு போக வேண்டும் ?

2. உன்னுடைய ஊரிலிருந்து செஞ்சிக்கு எவ்வாறு போக வேண்டும் ?

3. செஞ்சியில் உள்ள மலைகளின் பெயர்கள் யாவை ?

4. ‘கண்ணறைகள்’ என்றால் என்ன?

5. களஞ்சியத்தின் அமைப்பைக் கூறு.

6. மரப்பாலத்தைப் போர்க்காலத்தில் எதற்குப் பயன் படுத்தினார்கள்?

7. கிருட்டிணகிரியில் உள்ளவை யாவை?

2. தொடரில் அமைத்து எழுது :

செலவு (பயணம்), வண்டி நிலையம், அரண், இணைத்து, அகழி, சரிந்து, தூர்ந்து, வரிசை வரிசையாக.

3. எதிர்ச் சொற்கள் எழுது :

அருகில், கண்டோம், ஏற, இளைப்பது, பகைவர், உச்சி, மறைந்தது.

4. கீழுள்ள சொற்களுக்குத் திணை, பால், எண், இடம் கூறு :

அழகன், படிக்கிறேன், எழுமூர், புகைவண்டி, மலைகள், மாணவர்கள், பெண்கள், நாங்கள், சொன்னாய், அறிந்தோம்.

5. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை அமைத்து எழுது :

1. சுவர்களைச் சுற்றி ஆழமான —— இருக்கிறது.
2. கலியாண மகால் —— மலையில் இருக்கிறது.
3. அரச குடும்பப் பெண்கள் இருக்கும் இடத்திற்கு —— என்று பெயர்.
4. —— மலை உச்சியில் உள்ளது.

16. பழிக்குப் பழி

ஏலங்குடி என்ற நகரில் ஓர் அரசன் இருந்தான். அவன் மகன் கிளிகளிடம் அதிக விருப்பமுள்ளவன். அதனால் அரசன் காடுகளில் வாழ்ந்த கிளிகளை யெல்லாம் பிடித்து வரச் செய்து வளர்த்து வந்தான். கிளிகளுக்கெல்லாம் பாலும், சோறும், பழமும் கொடுத்தான். அக்கிளிகளுள் ஒரு குறும்புள்ள கிளி யிருந்தது. அது அங்கு வருவோர் போவோரை யெல்லாம் கேலி செய்வது வழக்கம்.

ஒரு நாள் அங்கு வந்த அரண்மனைச் சோதிடரையும் கிளி கேலி செய்தது. அதைக் கண்ட சோதிட



ருக்கு மிகுந்த சினமுண்டாயிற்று. அவர் அக்கிளியைப் பார்த்து, " திமிர் பிடித்த கிளியே! உன்னையும் உன் இனத்தையும் ஒழித்துக் கட்டுகிறேன் பார்" என்று சொன்னார். அதைக் கேட்ட கிளி, " நீ என் இனத்தை ஒழித்தால் நான் உன் இனத்தை ஒழிப்

பேன்'' என்று பதிலுக்குக் கூறியது. சோதிடர் பதில் பேசாமல் கோபமாய்ச் சென்ருர்.

சில நாட்களுக்குப் பின்னர் அரண்மனையில் பாம்புகளின் தொல்லை மிகுதியாக இருந்தது. அரசன் எவ்வளவோ முயன்றும் பாம்புகளை ஒழிக்க இயல வில்லை. அவன் சோதிடரை வரவழைத்துப் பாம்பு கள் நடமாட்டம் அரண்மனையில் மிக்கிருக்கிறது; அதை எவ்வாறு தடுக்கலாம் என்று கேட்டான். கிளியைப் பழிவாங்க அதுதான் தக்க சமயம் என்று கருதிய சோதிடர், ''கிளிகளைக் கொன்று எண்ணெய் இறக்கிப் பாம்புப் புற்றில் ஊற்றி ஞல் பாம்புகள் வரமாட்டா'' என்று கூறினர். அதைக் கேட்ட அரசன் ஆராயாமல் அரண்மனைக் கிளிகளையெல்லாம் கொன்று தைலமிறக்கிப் பாம்புப் புற்றில் ஊற்றும்படித் தன் ஆட்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்களும் அவ்வாறே செய்தனர். ஆனல் அக்குறும்புக்காரக் கிளி மட்டும் எப்படியோ காட்டிற்குத் தப்பி ஓடிவிட்டது; அங்குக் குளக் கரையிலிருந்த ஒரு மரத்தில் வாழ்ந்திருந்தது.

ஒரு நாள் இளவரசனெருவன் வேட்டையாடிக் களைத்து வந்து அக்குளத்து நீரைக் குடித்தான். அது நச்சு நீர் ஆதலால் அவன் அப்பொழுதே இறந்து விட்டான். அதைப் பார்த்துக்கொண்டி ருந்த கிளி அவன் கழுத்திலிருந்த முத்து மாலை யொன்றைத் தூக்கிக் கொண்டு பழைய அரசனிடம் சென்றது. அதைக் கண்ட அரசன், ''கிளியே! உனக்கு இந்த முத்து மாலை ஏது?'' என்று கேட் டான். அதற்குக் கிளி, ''நான் கூறுகிறபடி செய்தால் உனக்கும் இதைப்போல் நிறைய முத்து மாலைகள் கிடைக்கும்,'' என்று உரைத்தது. அரசன் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டான். ''அரசே! நூறு சோதிடர்களுக்கு நீ விருந்து வைத்துப் பக்கத் துக் காட்டின் நடுவிலுள்ள குளத்திலிருந்து தண்ணீர்

கொண்டு வந்து அவர்களுக்குக் குடிக்கக் கொடுக்க வேண்டும். அந்நீரை விருந்து உண்ணும் சோதிடர்களைத் தவிர வேறு யாரும் குடிக்கக் கூடாது. இதனை நீ யாருக்கும் சொல்லாமல் செய்ய வேண்டும்,'' என்று கிளி கூறிற்று. அதன் படியே அரசன் அரண்மனைச் சோதிடருக்கும் மற்றும் அவருக்கு வேண்டிய தொண்ணூற்றென்பது சோதிடர்களுக்கும் விருந்து வைத்தான். நச்சு நீரைக் குடித்த சோதிடர் அனைவரும் மாண்டு போயினர். பழி தீர்த்துக் கொண்ட கிளி யார் கண்ணிலும் படாமல் ஓடி மறைந்தது.

பயிற்சி

1. விடை எழுது :

1. அரசன் கிளிகளை ஏன் வளர்த்தான்?
2. சோதிடன் கிளியிடம் ஏன் சினம் கொண்டான்?
3. கிளிகளைக் கொல்லச் சோதிடன் என்ன சூழ்ச்சி செய்தான்?
4. கிளிக்கு முத்து மாலை எவ்வாறு கிடைத்தது?
5. கிளி எவ்வாறு பழி தீர்த்துக் கொண்டது?

2. தொடரில் அமைத்து எழுது :

குறும்புகள், ஒழித்துக்கட்டு, தொல்லை, நடமாட்டம், மிக்கிருப்பது, கண்ணில் படாமல்.

3. சேர்த்து எழுது :

விருப்பம் + உள்ளவன்	குறும்பு + உள்ள
காரணம் + என்ன	கிளிகள் + எல்லாம்
கரையில் + இருந்த	சோதிடர் + அனைவரும்

4. "கிளியே உனக்கு இந்த முத்து மாலை ஏது"—மேலுள்ள தொடரைப் பார். " " இவ்வாறு குறி இடப்பட்டிருக்கிறது. இதைப் போன்றே உன்னுடைய பாடங்களில் பல இடங்களில் குறிகள் இடப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். எம்மாதிரி இடங்களில் இந்தக் குறி இடப்பட்டிருக்கிறது என்று நன்ருய்க் கவனித்துச் சொல். ஒரு பாடத்தில், ஒருவர் சொன்னதை அவரே சொல்வதுபோல் எழுதினுல், அந்தப் பகுதிக்கு இக்குறி யிட வேண்டும். இதற்கு மேற்கோள் குறி என்று பெயர்.

பின்னுள்ள தொடரில் மேற்கோள் குறி இடப்பட்டுள்ளதைக் கவனி.

என் தகப்பனர், தம்பியைப் பார்த்து, "நீ இன்று விளையாடப் போக வேண்டாம்,'' என்று கூறினுர்.

17. போ போ போ (பாட்டு)

வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ
ஒலியிழந்த குரலினாய் போ போ போ
ஒளியிழந்த மேனியாய் போ போ போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மையென்றும் வேண்டுவாய் போ போ போ.

வா வா வா (பாட்டு)

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா.

—*பாரதியார்*

பயிற்சி

1. விடை எழுது :

1. பாரதியார் யார் யாரைப் ‘போ போ’ என்கிறார் ?
2. பாரதியார் யார் யாரை ‘வா வா’ என்கிறார் ?

2. பிரித்து எழுது :

வலிமையற்ற, பொலிவிலா, ஒலியிழந்த.

18. தமிழ்த் தென்றல்

தெற்கிலிருந்து வீசும் காற்றிற்குத் தென்றல் என்று பெயர். அது மென்மையாகவும், குளிர்ச்சியாக வும் வீசுவதால் நாம் இன்பம் அடைகிறோம். உட லுக்கு இன்பம் தரும் தென்றலைப்போல் இனிமை யாகத் தமிழில் பேசி அறிவுக்கு இன்பமளித்த ஒரு பெரியாரைத் தமிழ்த் தென்றல் என்று நாம் அழைக் கிறோம். அவரின் பெயர் திரு. வி. கலியாணசுந் தரனார் என்பது. அவரை எல்லோரும் திரு. வி. க. என்றே அன்பாக அழைப்பது வழக்கம்.

திரு. வி. கலியாண சுந்தரனார் சென்னையில் சைதாப்பேட்டைக்கு அருகிலுள்ள துள்ளம் என்ற சிற்றூரில் 1883–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 26-ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் விருத்தாசல முதலியார் ; தாயார் பெயர் சின்னம் மாள். இவரது முன்னோர்கள் தஞ்சாவூர் மாவட்டத்

தில் உள்ள திருவாரூரில் வாழ்ந்தவர்கள். அவ்வூர்ப் பெயரின் சுருக்கமாகிய 'திரு' என்னும் சொல்லை முன் வைத்துத் திரு. வி. க. என இவர் அழைக்கப் பட்டார்.

திரு. வி. க. இளமையில் மிகவும் சுறுசுறுப் பாகவும் துடுக்காகவும் இருந்தார். எதற்கும் அஞ்சாத வீர உள்ளம் இவருக்கு இருந்தது. இவர் பள்ளி யிலும், கல்லூரியிலும் படித்ததோடல்லாமல், பல பெரும் புலவர்களிடமும் தனியாகத் தமிழை நன்கு கற்றுச் சிறந்த அறிஞரானர்.

திரு. வி. க. படிப்பை முடித்து வேலையில்லாமல் பல காலம் வருந்தினர். பிறகு சில இடங்களில் கணக்கராக வேலை பார்த்தார். கடைசியில் சென்னையி லிருந்த ஒரு பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றினர். தேச பக்தன், நவசக்தி முதலிய பத்திரிகைகளில் இவர் ஆசிரியராக இருந்து, பல நல்ல கட்டுரைகளை எழுதினர். காந்தியடிகள், பாரதி யார் முதலிய பல பெரியார்களின் நண்பராகவும் திகழ்ந்தார். காந்தியடிகளுடன் சேர்ந்து நம் நாடு விடுதலை அடையப் பெரும் பாடுபட்டவர்களுள் இவரும் ஒருவர். அதனல் இவர் பல கடுந் தண்டனை களை ஏற்றுத் துன்பமடையவும் நேர்ந்தது.

இவர் கமலாம்பிகை என்ற அம்மையாரை மணந்து இல்வாழ்க்கை நடத்தி வந்தார். இவர்களது இல்லற வாழ்க்கை அன்பும், அறமும் கொண்டு சிறந்து விளங்கியது. இவர்களுக்கு இரண்டு குழந் தைகள் பிறந்தன. ஆனல் அவற்றில் ஒன்றுகூட உயிர் வாழவில்லை. திருமணம் நடந்த ஆறு ஆண்டு கள் கழித்துக் கமலாம்பிகை அம்மையாரும் இறந் தார். இவ்வாறு பல துன்பங்களை அடைந்த திரு. வி. க. கடைசி வரையில் தமக்குச் சொந்தமாக ஒரு வீடு கூட இல்லாத ஏழையாகவே வாழ்ந்தார்.

இவர் பொதுக் கூட்டங்களில் மிகவும் அழகாகப் பேசுவார். இவரது பேச்சை மக்கள் மணிக்கணக்கில் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். இவர் ஏறக்குறைய ஐம்பது நூல்கள் எழுதியுள்ளார். இவை தூய தமிழில் எழுதப்பட்டவை. இவர் எழுதிய நூல்களுள் முருகன் அல்லது அழகு, தமிழ்த் தென்றல், பெண்ணின் பெருமை முதலியவை சிறந்தனவாகும். இந்த நூல்களை நீங்கள் மேல் வகுப்புக்களில் படித்து இன்புறலாம்.

திரு. வி. க. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்தவம், இஸ்லாம் முதலிய பல மதங்களின் உண்மைகளையும் அறிந்தவர். ஆகவே அவர் மதவேறுபாடின்றி வாழ்ந்தார். தமிழ் வளர்ச்சிக்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும், தொழிலாளர் முன்னேற்றத்திற்காகவும் அவர் சிறந்த தொண்டாற்றியுள்ளார். இவ்வளவு பெருமைகளும் பெற்று விளங்கிய தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனர் 17-9-1953-ல் நம்மை விட்டுப் பிரிந்தார். ஆனல் அவர் பெயர் என்றும் நம் நாட்டில் நிலைத்திருக்கும். நாமும் திரு. வி. க.வைப் போல் வாழ்வோமாக.

பயிற்சி

1. விடை எழுது :

1. 'தென்றல்' என்பது யாது? அது எத்தகையது?
2. திரு. வி. க.-வைத் 'தமிழ்த் தென்றல்' என்று ஏன் அழைக்கிறோம்?
3. 'திரு. வி. க.' என்பதில் திரு—வி—க ஆகிய ஒவ்வொன்றும் குறிக்கும் சொற்கள் யாவை?
4. திரு. வி. க. வின் பெற்றோரின் பெயர்கள் யாவை?
5. திரு. வி. க. இளமையில் எவ்வாறு இருந்தார்?
6. அவர் எவ்வெவற்றிற்குத் தொண்டாற்றியுள்ளார்?
7. அவர் இயற்றியுள்ள நூல்களுள் சிலவற்றின் பெயர்களை எழுது.
8. திரு. வி. க.-வைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.

2. தொடரில் அமைத்து எழுது :

மென்மையாக, சுறுசுறுப்பாக, துடுக்காக, கணக்கர், திகழ்ந்தார், மணிக்கணக்கில், வேறுபாடின்றி, நிலைத்திருக்கும்.

3. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருள் மாதரு வேறு சொற்களை அமைத்து எழுது :

1. நாம் **இன்பம்** அடைகிறோம்.
2. எதற்கும் **அஞ்சாத** வீர உள்ளம் இருந்தது.
3. தமிழை நன்கு கற்றுச் சிறந்த **அறிஞரானார்**.
4. அவர் பல **துன்பங்களை** அடைந்தார்.
5. அவர் தமிழாசிரியராகப் **பணியாற்றினார்**.

4. திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

மேலுள்ள தொடரில் மூன்று சொற்கள் உள்ளன. அதிலுள்ள 'எழுதினார்' என்பது வினைச்சொல் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதுதான் அத்தொடரை முடிவடையச் செய்கிறது. இவ்வாறு ஒவ்வொரு சொற்றொடரிலும் ஒவ்வொரு முடிக்கும் சொல் இருக்கும். அதற்குப் பயனிலை என்றும் பெயர் உண்டு. பெரும்பாலும் இது சொற்றொடரின் இறுதியில் இருக்கும். பயனிலையை 'எது' அல்லது 'யார்' என்று கேட்டால் அதற்கு விடையாக வருவது எழுவாய் ஆகும். 'எழுதினார்' என்ற பயனிலையை 'யார் எழுதினார்?' என்று கேட்டால் 'திருவள்ளுவர்' என்ற விடை கிடைக்கும். எனவே, இத்தொடரில், 'திருவள்ளுவர்' என்பது எழுவாய்.

பயனிலையை 'எதை' அல்லது 'யாரை' என்று கேட்டால் வரும் விடைக்குச் செயப்படுபொருள் என்று பெயர். 'எழுதினார்' என்ற பயனிலையை 'எதை எழுதினார்?' என்று கேட்டுப் பெறும் விடை 'திருக்குறளை' என்பதாகும். ஆகவே, இத்தொடரில் 'திருக்குறள்' என்பது செயப்படுபொருளாகும்.

சொற்றொடர்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்று சொற்கள் மட்டுமே யன்றி வேறு சொற்களும் இருக்கும். சில சொற்றொடர்களில் செயப்படுபொருள் இருக்காது ; எழுவாயும் பயனிலையும் மட்டுமே இருக்கும்.

TB
031 (4)
NS9

19. அறிவுள்ள எதிரி

பழந் தமிழ் நாட்டில் பாணர் என்ற ஒரு வகுப்பார் வாழ்ந்திருந்தனர். பண்ணில் வல்லவர் ஆதலால் அவர்களுக்குப் பாணர் என்று பெயர் வந்தது. பண் என்றால் இசை. இசையுடன் பாடல்களைப் பாடுவதும், யாழ் என்னும் இசைக் கருவியை மீட்டுவதும் அவர்களது தொழில். அரசர்களும், மற்றவர்களும் அப் பாணர்களுக்கு நிறைந்த பரிசுகளைக் கொடுத்து ஆதரித்து வந்தனர்.

முற்காலத்தில் பாணன் ஒருவன் ஓர் அரசனிடம் சென்றான். தன் யாழை மீட்டி இனிய இசையுடன் அருமையான பாடல்களைப் பாடினான். அவைகளைக் கேட்ட அரசன் மிகுந்த இன்பம் அடைந்து மகிழ்ந்தான்; தனது மகிழ்ச்சியின் அடையாளமாக ஒரு சிறந்த மாணிக்கத்தை அப் பாணனுக்குப் பரிசாக அளித்தான். அரும்பெரும் பரிசிலைப் பெற்ற பாணன் அகமகிழ்ந்து வீடு திரும்பினான்.

அவனது வீட்டிற்குச் செல்லும் வழியில் ஒரு காடு இருந்தது; அக் காட்டில் திருடர்களும் இருந்தனர். அவ் வழியே செல்லும்போது திருடர்கள் தனது மாணிக்கத்தைக் கவர்ந்து கொள்ளாமல் இருக்க வேண்டுமே என்பதற்காக அவன் அதனைத் தன் வாயில் போட்டு விழுங்கிவிட்டான். அதனைப் பார்த்துக் கொண்டிருந்த வேடனொருவன் அப் பாணனைப் பின் தொடர்ந்து சென்றான்.

467823

பாணன் காட்டின் நடுவே போய்க்கொண்டிருந்த போது வேடன் அவனை வழிமறித்தான்; வயிற்றிலிருந்த மாணிக்கத்தைக் கக்கச் சொன்னான். உடனே பாணன், "என் வயிற்றில் மாணிக்கம் இல்லை; உன் வயிற்றில்தான் அது இருக்கிறது; நீ

அதனைக் கக்கு,'' என்றான். இவ்வாறே இருவரும் மாறிமாறிப் பேசிக்கொண்டிருந்தனர். அவற்றைக் கேட்டுக்கொண்டே திருடர் சிலர் அங்கு வந்து சேர்ந் தனர். அவர்கள் பாணன் வயிற்றில் உள்ள மாணிக்

கத்தைக் கக்கச் சொல்லி அதட்டினார்கள். அதனைக் கக்காவிட்டால் அவனது வயிற்றைக் கிழித்து எடுத் துக் கொள்வதாகவும் மிரட்டினர்.

வேடன் திகைப்படைந்து சிறிது நேரம் பட்ட மரம்போல் நின்றுவிட்டான். பிறகு அவனுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. உடனே அவன் திருடர் களைப் பார்த்து '' ஐயா! மக்கள் வயிற்றில் மாணிக் கம் இருப்பதுண்டோ? நாங்கள் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தோம். நீங்கள் அதனை மெய் யென்று நம்பிவிட்டீர்களே! வேண்டுமானால் என் வயிற்றைக் கிழித்துப் பாருங்கள்; உண்மை விளங் கும்,'' என்றான். உடனே திருடர்கள் வேடனது வயிற்றைக் கிழித்துப் பார்த்தனர். அங்கு ஏது மாணிக்கம்? திகைப்படைந்த திருடர்கள் மிகவும் இரக்கப்பட்டனர்; வேடனைக் கொன்றதற்காக

வருத்தமும் அடைந்தனர். "இப் பாணனையாவது கொல்லாது விடுவோம்" என்று கருதி அவனை விடுவித்தனர்.

விடுதலை அடைந்த பாணன், முதலில் தனது எதிரியாக வந்த வேடன் பிறகு தனது உயிரைக் காத்த நண்பன் ஆனதை எண்ணி எண்ணி வியந்தான்; அவனது அறிவையும், அன்பையும் பண்ணோடு சேர்த்து நாடெங்கும் பாடிக்கொண்டே இருந்தான்.

பயிற்சி

1. விடை எழுது:

1. பாணர் என்போர் யார்?
2. அவர்களுக்கு ஏன் அப்பெயர் வந்தது?
3. பாணன் மாணிக்கத்தை விழுங்கியது ஏன்?
4. திருடர்கள் பாணனை எவ்வாறு மிரட்டினர்?
5. வேடன் திருடர்களைப் பார்த்து என்ன கூறினான்?
6. விடுதலையடைந்த பாணன் என்ன செய்தான்?

2. கீழுள்ள தொடர்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எடுத்து எழுது:

1. ஔவையார் ஆத்திசூடியை எழுதினர்.
2. தச்சர் மேசையைச் செய்தார்.
3. வண்ணார் துணியை வெளுப்பார்.
4. நெசவாளி தறியில் துணிகளை நெய்வார்.
5. கருப்பன் கடைக்குப் போய்ப் பந்தை வாங்கினான்.

	எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்
1			
2			
3			
4			
5			

20. உடல் நலம் பேணல் (பாட்டு)

உடலின் உறுதி உடையவரே
　　உலகில் இன்பம் உடையவராம்.
இடமும் பொருளும் நோயாளிக்(கு)
　　இனிய வாழ்வு தந்திடுமோ ? 1

சுத்தம் உள்ள இடமெங்கும்
　　சுகமும் உண்டு ; நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
　　நீண்ட ஆயுள் பெறுவாயே. 2

கூழை யேநீ குடித்தாலும்
　　குளித்த பிறகு குடியப்பா
ஏழை யேநீ ஆனாலும்
　　இரவில் நன்றாய் உறங்கப்பா. 3

மட்டுக் குணவை உண்ணாமல்
　　வாரி வாரித் தின்பாயேல்
திட்டு முட்டுப் பட்டிடுவாய் ;
　　தினமும் பாயில் விழுந்திடுவாய். 4

தூய காற்றும் நன்னீரும்
　　சுண்டப் பசித்த பின்னுணவும்
நோயை ஓட்டி விடுமப்பா ;
　　நூறு வயதும் தருமப்பா. 5

அருமை உடலின் நலமெல்லாம்
　　அடையும் வழிகள் அறிவாயே.
வருமுன் நோயைக் காப்பாயே ;
　　வையம் புகழ வாழ்வாயே. 6

—கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை.

பயிற்சி

விடை எழுது :

1. உடல் நலம் அடையும் வழிகளில் நான்கைக் கூறு.
2. எவை நோயை ஓட்டும் ?

21. பட்டுப் பூச்சி

என் பெயர் பட்டுப் பூச்சி. என் இனத்தின் வரலாற்றை அறிந்தால் நீங்கள் மிகவும் ஆச்சரியப் படுவீர்கள். சில உயிரினங்கள் பிறக்கும் பொழுதே தாயின் உருவத்தைப் போன்றிருக்கும். ஆடு, மாடு முதலிய விலங்குகளனைத்தும் இம்மாதிரி உயிரினங் களேயாகும். மற்றும் சில பிறக்கும் போது வேறு வடிவாய் இருக்கும். நாள் ஆக ஆக, உருவத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு முடிவாகத் தாயின் உருவத்தை அடையும். நாங்கள் இரண்டாம் வகையைச் சேர்ந்த வர்கள். ஈ, கொசு, வண்ணாத்திப் பூச்சி முதலிய பூச்சிகளும் எங்கள் வகையைச் சேர்ந்தவையே.

முதலில் நாங்கள் முட்டை உருவிலேயே தோன்றுகிறோம்; பத்து நாட்களில் முட்டைகளி லிருந்து புழுக்களாக வெளி வருகிறோம். அச்சமயம் எங்களைப் பட்டுப் புழுக்கள் என்பார்கள். அப்போது எங்களின் முக்கிய உணவு முசுக்கட்டை மரத்தின் இலைகள்தான். நாங்கள் கால் அங்குல நீளமே இருப் போம். புழுக்களாக இருக்கும்போது எங்களைப் பெருந்தீனிக்காரர்கள் என்றே கூறலாம். நாங்கள் ஏராளமான முசுக்கட்டை இலைகளைத் தின்போம். சுமார் ஒரு மாதத்திற்குப் பிறகு நான்கு நாட்களுக்கு ஒரு முறை எங்கள் மேல் தோல் உரியும்; புதுத் தோல் தோன்றும். இவ்வாறு நான்கு முறை தோல் உரித்துக் கொள்வோம். பின்னரே முழு வளர்ச்சி யடைந்த புழுக்களாகத் தோன்றுவோம். அப்போது எங்கள் நீளம் சுமார் மூன்று அங்குலம் இருக்கும்.

முழுவளர்ச்சி யடைந்த புழுக்களான பிறகு எங் கள் உடலிலுள்ள இரு சிறு குழாய்களின் மூலம் ஒரு வித நீர் மெல்லியதாக வெளிவரும். இந்நீர் காற்றுப் பட்டவுடன் இறுகிக் கெட்டியான நீண்ட நூலாக மாறும் தன்மையுடையது. நாங்கள் ஒவ்வொருவரும்

எங்கள் உடலைச் சுற்றி இந்நூலால் தனித் தனிக் கூடுகள் அமைத்துக்கொள்ளுவோம். இக் கூட்டினைப் புழுக்கூடு என்பார்கள். இக்கூட்டிற்குள் நாங்கள் உறங்குவோம். அப்போது எங்களுக்குக் கொஞ்ச



மும் உணவு தேவையில்லை. எங்கள் உடலில் அச் சமயம் பல மாற்றங்கள் ஏற்படும். பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குள் நல்ல வளர்ச்சி யடைந்து விடுவோம். பிறகு கூட்டை அறுத்துக் கொண்டு

பட்டுப் பூச்சியாக வெளியே வருவோம். கூட்டின் உள்ளே உறங்கத் தொடங்கும்போது புழுவாக இருந்த நாங்கள் வெளியே வரும்போது இறக்கைகளுடன் கூடிய பூச்சியாக மாறித் தோன்றுவது வியப்பான தல்லவா?

பட்டுப் பூச்சி நிலையில் எங்கள் உடலில் தலை, மார்பு, வயிறு என மூன்று பகுதிகளைக் காணலாம். தலைப் பாகத்தில் இரண்டு கண்களும், இரண்டு நீண்ட உணர்வு இழைகளும், ஒரு வாயும் இருக்கும். மார்புப் பாகத்தில் இரு இணை இறக்கைகளும் மூன்று இணைக் கால்களும் உள்ளன. இறக்கைகள் செதில் களால் ஆனவை. அவை பழுப்பு நிறக் கோடுகளு டன் பல நிறங்களையுடையனவாய்க் காட்சியளிக்கும்.

எங்கள் கூடுகளிலிருந்து எடுக்கும் நூலைத்தான் பட்டு நூல் என்கிறார்கள். பட்டு இழைகள் அழகா யும் உறுதியாயும் இருக்கும். நீங்கள் பளபளப்பாக வும், வழவழப்பாகவும் உடுத்தும் பட்டாடைகளெல் லாம் இந்நூலைக் கொண்டு நெய்யப்பட்டவையே. எங் கள் உதவியால்தான் உங்களுக்குப் பட்டாடை கிடைக்கிறது. ஆயினும், நாங்கள் பட்டுப் பூச்சி களாக மாறிக் கூடுகளிலிருந்து வெளிவரும் வரை மக்கள் எங்களை விட்டு வைப்பதில்லை. ஏன் தெரி யுமா? நாங்கள் கூடுகளிலிருந்து வெளிவரும்பொழுது கூடுகளை அறுத்துக் கொண்டல்லவா வருகிறோம். அப்போது நூல் துண்டு துண்டாக அறுந்து போகும். அவை துணி நெய்வதற்குப் பயன்பட மாட்டா. எனவே, எங்கள் வளர்ச்சிக்காகச் சில கூடு களை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற அனைத்தையும் வெந்நீரில் போட்டுப் பூச்சி நிலையிலேயே எங்களைக் கொன்று விடுகிறார்கள். பிறகு பட்டு நூலைப் பிரித்து எடுக்கிறார்கள். எங்களின் கூடுகள் ஒவ்வொன்றி லிருந்தும் சுமார் முந்நூறு கஜம் பட்டுநூல் எடுக் கிறார்கள்.

பட்டாடை உற்பத்திக்கு நாங்கள் மிகவும் அவசியமானதால் எங்களை வளர்க்கப் பட்டுப் பண்ணைகள் பல இடங்களில் இருக்கின்றன. இந்தியாவில் மைசூர், கொள்ளேகாலம், காஷ்மீர், வங்காளம், அஸ்ஸாம் முதலிய இடங்களில் பட்டுப் பண்ணைத் தொழில் நடந்து வருகிறது.

பயிற்சி

1. விடை எழுது :

1. பட்டுப் பூச்சியின் வளர்ச்சியில் காணப்படும் நான்கு நிலைகள் யாவை.
2. பட்டுப் புழுவின் உணவு யாது?
3. பட்டு நூல் எப்படி உண்டாகிறது?
4. பட்டுப் பூச்சியின் உடலமைப்பை விளக்கு.
5. கூட்டிலிருந்து வெளிவருவதற்கு முன் பூச்சியை ஏன் கொன்று விடுகிறார்கள்?
6. பட்டுப் பண்ணைகள் இந்தியாவில் எங்கெங்கே உள்ளன?

2. தொடரில் அமைத்து எழுது :

முடிவாக, ஏராளமான, மெல்லியதாக, அமைத்துக் கொள், மாற்றங்கள், வியப்பானது, பயன்படமாட்டா, அவசியமானதால்.

3. எதிர்ச்சொற்கள் எழுது :

பிறக்கும், புதுமை, வழவழப்பு, வருகிறது.

4. கீழுள்ள தொடர்கள் முற்றுப் பெறாமல் உள்ளன. தக்க சொற்களை எழுதி அவற்றை முடி.

1. நாள் ஆக ஆகப் பட்டுப் பூச்சியின் உருவத்தில்.........
2. பட்டுப் பூச்சி தன் எச்சிலின் உதவியால்.......... ....
3. பூச்சி வெளிவரும்போது கூட்டை அறுத்துக்கொண்டு வெளிவருவதால்...............

27. பார்வைக் குருவி

குணக்குடி என்ற ஊரில் குருவிச்சாமி என்று ஒருவர் வாழ்ந்து வந்தார். அவ்வூரார் அவரைப் "பார்வைக் குருவி" என்று மறு பெயரிட்டு அழைக்கலாயினர். அவ்வாறு அழைப்பதன் காரணம் அவ்வூரார் பலருக்கும் தெரியும். ஆனால் அண்டை அயல் ஊராருக்கு அது தெரியவில்லை. யாராவது அக் காரணத்தைக் கேட்டாலும் "மாவுக்கேற்ற பணியாரம், ஆளுக்கேற்ற பெயர்" என்றுதான் குணக்குடிக்காரர்கள் பதில் கூறுவது வழக்கம். எனவே, இது மற்ற ஊராருக்குப் புரியாத ஒரு புதிராகவே இருந்தது.



அந்த ஊரில் அதுவரையில் அஞ்சல் நிலையம் ஏற்படுத்தப் படவில்லை; அருகிலிருந்த திருக்கூடல் அஞ்சல் நிலையத்திலிருந்துதான் குணக்குடிக்கு அஞ்சல்கள் வருவது வழக்கம். அதனால் வாரத்திற்கு இருமுறைதான் அவ்வூருக்கு அஞ்சல்கள் வரும். மற்றும் அங்கிருப்போர் கடிதம் எழுதவேண்டுமானாலும்

திருக்கூடலுக்குச் சென்ருகவேண்டும். இது அவர்களுக்குப் பெரிய தொல்லையாக இருந்தது. அதனுல் அவ்வூரார் அனைவரும் ஒன்றுகூடித் தங்கள் ஊருக்கு அஞ்சல் நிலையம் ஒன்று தனியாக வேண்டும் என்று அரசியலாருக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை அறிந்த குருவிச்சாமியும் அரசியலாருக்கு ஒரு விண்ணப்பம் எழுதினுர். அதில், அவர் தங்களூரில் தனியாக அஞ்சல் நிலையம் ஏற்படுத்துவதனுல் அரசுக்கு வீண் செலவுதான் ஏற்படும் என்றும், பயன் சிறிதும் உண்டாகாது என்றும் எழுதினுர். மற்றும், இப்போதிருப்பதுபோல் திருக்கூடலிலிருந்து அஞ்சல்கள் வருவதே நன்ருகவும், பொருத்தமாகவும் இருக்கும் என்றும் எழுதினுர். ஆனுல் அரசியலார் அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் குணக்குடியில் ஒரு புதிய அஞ்சல் நிலையத்தைத் திறந்தனர். எனினும், குருவிச் சாமி தனது முயற்சிகளைச் சற்றும் குறைத்துக்கொள்ளாமல் இவ்வாறே பல வகையிலும் ஊருக்கு எதிர்ப்பாகவே நடந்து கொண்டிருந்தார். எனவே, அவ்வூரார் குருவிச் சாமியை ஒதுக்கி வைத்தனர்; அவர் கூறுவனவற்றை யாரும் கேட்பதேயில்லை. அதனுல் மனம் புழுங்கிய குருவிச்சாமி ஊராரைப் பழிவாங்கத் திட்டமிடலானுர்.

குணக்குடிக்கு மேற்கிலிருந்த மருக்கொழுந்துப் பாளையத்தின் வழியாக வரும் வாய்க்கால் நீரைத் தான் இரண்டு ஊராரும் நிலங்களுக்குப் பாய்ச்சுவார்கள். மருக்கொழுந்துப்பாளையம் மேற்கேயிருந்ததால் அவ்வூரார் கீழ் ஊராகிய குணக்குடிக்குத் தண்ணீர் விடாமல் அடிக்கடி வாய்க்காலைக் குறுக்கே கட்டி விடுவார்கள். இக் காரணத்தால் இரண்டு ஊராருக்கும் பகை மூண்டது; சண்டைகளும் நடக்கத் தொடங்கின; கடைசியாக வழக்கு ஒன்றும் நடந்தது.

வழக்கின் முடிவில் குணக்குடி தோற்றது. தவறு செய்தாலும் மருக்கொழுந்துப் பாளையத்தாருக்கே வெற்றி கிட்டியது. குருவிச் சாமியின் செய்கையே இதற்குக் காரணம். அவர், தான் பிறந்த ஊருக்கு எதிராக வழக்கில் பொய் சாட்சிக் கூறினர்; தன் ஊரைக் கெடுப்பதற்கே பாடுபட்டார். வேட்டைக்காரர்கள் பறவைகளைப் பிடிப்பதற்குப் பயன் படுத்தும் வளர்ப்புப் பறவையைப் (பார்வைக் குருவி) போல், மருக்கொழுந்துப் பாளையத்தார் இவரை உளவளுகப் பயன்படுத்திக்கொண்டனர். எனவே, இவரைப் 'பார்வைக் குருவி' என்று பலரும் அழைத்ததில் தவறில்லையல்லவா?

பயிற்சி

1. விடை எழுது:

1. "மாவுக்கேற்ற பணியாரம்" என்ருல் என்ன?
2. குணக்குடியில் ஏன் புதிய அஞ்சல் நிலையம் திறக்க வேண்டும்?
3. குருவிச்சாமி அஞ்சல் நிலையம் வேண்டாம் என்பதற்கு என்ன காரணம் கூறினர்?
4. குருவிச்சாமியை ஊரார் ஒதுக்கி வைத்தது ஏன்?
5. மருக்கொழுந்துப் பாளையத்தாருக்கும், குணக்குடியாருக்கும் வழக்கு ஏற்பட்டதன் காரணம் யாது?
6. பார்வைக் குருவி என்பது யாது?

2. பிரித்து எழுது:

பெயரிட்டு, மாவுக்கேற்ற, அருகிலிருந்த, அங்கிருப்போர், தங்களூர், இப்போதிருப்பது, கொண்டிருந்தார், கேட்பதேயில்லை, திட்டமிடலானர், மேற்கிலிருந்த, கொண்டதேயாகும்.

23. நிலா (பாட்டு)

முழுமை நிலா ! அழகு நிலா !
முளைத்தது விண் மேலே—அது,
பழமையிலே புது நினைவு
பாய்ந்தெ ழுந்தாற் போலே !
அழுத முகம் சிரித்தது போல்
அல்லி விரிந்தாற் போல்,—மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித் தட்டுத்
தொத்திக்கிடந் தாற்போல் 1

குருட்டு விழியும் திறந்தது போல்
இருட்டில் வான விளக்கு !—நம்
பொருட்டு வந்தது பாடி ஆடிப்
பொழுது போக்கத் துவங்கு !
மரத்தின் அடியில் நிலவு வெளிச்சம்
மயிலின் தோகை விழிகள் !—பிற
தெருக்கள் எலாம் குளிரும் ஒளியும்
சேர்த்து மெழுகும் வழிகள் ! 2

—புரட்சிக் கவிஞர்.

பயிற்சி

தொடரில் அமைத்து எழுது :

பாய்ந்தெழு, தொத்தி, சுழற்றி, பொருட்டு, துவங்கு.

24. நுண்மதி

விசயநகர அரசர்களுள் புகழ்பெற்று விளங்கி யவர் கிருட்டிண தேவராயர் ஆவர். அவரிடம் சாளுவத் திம்மரசு என்பவர் தலைமை அமைச்சராய் இருந்தார். அவரை அனைவரும் அப்பாஜி என்று அழைப்பர். அவர் நுண்மதி படைத்தவர். எத்தகைய சிக்கலான கருத்துக்கும் தனது நுண்ணறிவால் மிக எளிதில் முடிவுகாணும் ஆற்றல் பெற்றவர். அப்பாஜி யின் புகழ் தென்னாட்டில் மட்டுமன்றி, வட நாட் டிலும் பரவிற்று.

அப்பாஜியின் அறிவுத் திறனைக் கேள்வியுற்ற டில்லியிலிருந்த முகம்மதியப் பேரரசர், அதனைச் சோதிக்க விரும்பினர். எனவே, உருவிலும் அளவி லும் ஒரே மாதிரியான மூன்று பதுமைகள் செய்து ஒரு செய்திச் சுருளுடன் விசயநகர அரசர்க்கு அனுப்பி வைத்தார். மூன்று பதுமைகளுள் எது சிறந்தவனையும், எது சாதாரணமானவனையும் எது, தாழ்ந்தவனையும் குறிக்கும் என்பதைத் தனக்கு அறிவிக்குமாறு அச்செய்திச் சுருளில் முகம்மதியப் பேரரசர் எழுதியிருந்தார். அம்மூன்று பதுமை களும் ஒன்றுக்கொன்று சிறிதும் வேறுபாடின்றி ஒன்றுபோலவேஇருந்ததால், அவற்றைக் கண்ணுற்ற எவராலும் முகம்மதியப் பேரரசரின் வினவுக்கு விடை கூற இயலவில்லை. முடிவில் விசயநகரத்தரசர் அப்பாஜியை வரவழைத்துப் பதுமைகளைக் காட்டி னர்; சுருளில் அடங்கியுள்ள செய்தியினையும் அறிவித்தார்.

அப்பாஜி அப்பதுமைகளைச் சிறிது நேரம் கூர்ந்து கவனித்தார். அப்பதுமைகளின் வலக் காதுகளில் மிகச் சிறு துளைகள் இருப்பதைக் கண்டார்; மெல்லிய குச்சியை அத் துளைகளின் வழியே செலுத்தினர். ஒரு பதுமையில் குச்சி வாய்

வழியாக வெளியே வந்தது. மற்ருெரு பதுமையில் குச்சி மறு காது வழியாக வெளியே வந்தது. மூன்ருவது பதுமையில் குச்சி வெளிவர வழியே இல்லை. "குச்சி உள்ளே சென்று வெளியே வராததைப் போலச் சிறந்தவன் தான் கேட்ட

செய்தியை வெளியே விட்டுவிடாமல் உள்ளத்திலேயே வைத்திருப்பான். குச்சி உள்ளே சென்று மறு காது வழியே வெளியே வந்தது போலச் சாதாரணமானவன் தான்கேட்ட செய்தியைப் பயன்படுத்திக்கொள்ளாமல் மறு காது வழியாக வெளியே விட்டு விடுவான். குச்சி உள்ளே சென்று வாய் வழியே வெளியே வந்தது போலத் தாழ்ந்தவன் தான் கேட்டசெய்தியை உடனே வெளியே அறிவித்து விடுவான். எனவே, இம் மூன்று பதுமைகளும் முறையே சிறந்தவனையும், சாதாரணமானவனையும், தாழ்ந்தவனையும் குறிக்கின்றன" என்று அப்பாஜி விளக்கினர். அதுகேட்டு அனைவரும் அப்பாஜியைப் போற்றினர்கள்.

அப்பாஜி கூறிய விவரங்கள் அனைத்தையும் குறித்து முகம்மதியப் பேரரசருக்கு முடங்கல் அனுப்பப்பட்டது. அவர் அப்பாஜியின் அறிவுத் திறனைக் கண்டு வியப்பெய்தினர்; அவரைப் பெரிதும் பாராட்டினர்; விலையுயர்ந்த பொருள்களை அவருக் குப் பரிசாக அனுப்பினர்.

எதையும் உற்று நோக்கி ஊகித்தறியும் நுண்மதி பெற்றதனாலல்லவா அபபாஜிச்கு அத்தகைய சிறப்பு ஏற்பட்டது.

பயிற்சி

1. விடை எழுது :

1. அப்பாஜி என்பவர் யார்? அவருக்கு ஏன் புகழ் உண்டாயிற்று?
2. டில்லிப் பேரரசர் அப்பாஜியை எவ்வாறு சோதிக்க விரும்பினர்?
3. டில்லிப் பேரரசர் அனுப்பிய வினாக்கள் யாவை?
4. மூன்று பதுமைகளிலும் காணப்பட்ட வேறுபாடுகள் யாவை?
5. சிறந்தவன், சாதாரணமானவன், தாழ்ந்தவன்—இவர் களின் தன்மைகள் யாவை?

2. தொடரில் அமைத்து எழுது :

நுண்மதி, பரவிற்று, சோதிக்க, ஒன்றுக்கொன்று, வேறுபாடு, ஒன்றுபோலவே, கூர்ந்து, பாராட்டு.

3. சேர்த்து எழுது :

பெரிய	+	அரசர்	தெற்கு	+	நாடு
வடக்கு	+	மேற்கு	தெற்கு	+	கிழக்கு
மேற்கு	+	திசை	ஒன்றுக்கு	+	ஒன்று
இடது	+	கை	வியப்பு	+	அடைந்தார்

4. கீழுள்ள தொடர்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைக் கூறு :

1. கிருட்டிண தேவராயர் விசயநகரத்தை ஆண்டார்.
2. அப்பாஜி நுட்பமான மதியை உடையவர்.
3. டில்லி அரசர் விசயநகர அரசருக்கு மூன்று பதுமை களை அனுப்பினர்.
4. அப்பாஜி பதுமைகளைக் கூர்ந்து கவனித்துப் பார்த் தார்.
5. டில்லி அரசர் விலை மிக்க பரிசுகளை அப்பாஜிக்கு அனுப்பினர்.

25. அதியமான்

தமிழ் நாட்டில் முன் காலத்தில் கேட்போர்க்கு இல்லை யென்னுது வழங்கும் வள்ளல்கள் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் அதியமான் என்பவனும் ஒருவன். "அதியமான் நெடுமான் அஞ்சி" என்பது அவனது முழுப் பெயராகும். அவனது ஊர் தகடூர். குதிரைமலை என்ற செழுமையான மலையும் அவனுக்குச் சொந்தமாயிருந்தது. அதியமான் வள்ளல் மட்டுமல்ல; அக்காலத்தில் ஓர் ஒப்பற்ற வீரனுகவும் திகழ்ந்தான். மழவர் என்ற ஒருவகை வீரர்களின் கூட்டத்திற்குத் தலைவனுகவும் விளங்கினுன். அவன் பல பெரிய அரசர்களுடன் போரிட்டு வெற்றி பெற்றிருக்கிருன். அவனைப் போரில் வெல்ல யாராலும் முடியாது.

மற்ற தமிழரசர்களைப் போலவும் வள்ளல்களைப் போலவும் அதியமான் தமிழ் மொழியிடத்திலும், தமிழ்ப் புலவர்களிடத்திலும் அளவற்ற பற்றும், மதிப்பும் வைத்திருந்தான். சிறப்பாக ஒளவையாரிடம் மிக்க அன்பு கொண்டவன் அதியமான். ஒளவையாருடன் பேசிக் கொண்டிருப்பதில் அவனுக்கு மிக்க விருப்பமுண்டு. ஏனென்ருல், ஒளவையார் நல்ல அறிவுரைகளைக் கூறிக்கொண்டே இருப்பவரல்லவா? அதனுல் ஒளவையாரை விட்டு அதியமான் அதிக நாட்கள் பிரிந்து இருக்கமாட்டான்.

ஒருநாள் அதியமான் மலைக் காடொன்றில் வேட்டையாடச் சென்ருன். நெடுநேரம் வேட்டையாடிய பிறகு அதிகக் களைப்புடன் ஒரு மரத்தின் நிழலில் தங்கி இளைப்பாறினுன். அப்போது தற்செயலாக மேலே நோக்கினுன். மலையின் உச்சியில் ஒரு நெல்லி மரம் இருப்பதை அவன் கண்டான். அந்நெல்லி மரத்தின் கனியை உண்பவர்கள் நெடுங்காலம் உயிர் வாழ்வர் என்பதை அவன் கேள்வியுற்றிருந்தான். அதனுல்அம்மரத்தில் உள்ள நெல்லிக்கனியைப் பறித்

துத் தின்ன வேண்டும் என்ற ஆவல் அவனுக்கு ஏற்பட்டது. அந்த ஆவலின் மிகுதியினுல் அவனுக்கிருந்த களைப்புப் போன இடந் தெரியாமல் மறைந்தது.

அதியமான் மிக்க ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் மலைமீது ஏறத் தொடங்கினுன். செங்குத்தான பாறைகளையும், முட்புதர்களையும் கடந்து மேலே சென்முன். அங்கே ஒரு பெரிய மலைப் பிளவு இருந்



தது. அதனையும் அரும்பாடுபட்டுக் கடந்து தான் முன்பு கண்ட நெல்லிமரத்தை அடைந்தான். மரத்தின் மீது ஏறி அங்கிருந்த நெல்லிக்கனியை பறித்துக்கொண்டு கீழே இறங்கினுன். அதனைத் தின்னத் தொடங்கும் போது ஔவையாரின் நினைவு அவனுக்கு வந்தது. ஔவையார் அந்நெல்லிக்கனியை உண்டு நெடுநாள் வாழ்ந்தால் மேலும் பல நூல்களை எழுதி மக்களுக்கு நன்மை செய்வார் என்று கருதினுன். எனவே, தான் அரும்பாடுபட்டுப் பறித்த, கிடைத்தற்

கரிய அக்கனியை ஔவையாருக்குக் கொடுக்க விரும்பினுன்.

அக்கனியை எடுத்துக்கொண்டு அதியமான் ஊருக்குத் திரும்பினுன். நேரே ஔவையாரிடம் சென்று அதைக் கொடுத்தான். அந்த நெல்லிக் கனியின் சிறப்புக்களை அவன் ஔவையாரிடம் கூற வில்லை. கூறினுல், ஔவையார் அதனை உண்ணுமல் தனக்கே திருப்பிக் கொடுத்துவிடுவார் என்பது அவனுக்குத் தெரியும். ஔவையாரும் அதனைச் சாதாரண நெல்லிப்பழம் என்றே கருதி வாங்கி மகிழ்ச்சியுடன் உண்டார். பிறகுதான் ஔவையாருக்கு அந் நெல்லிக்கனியின் பெருமைகள் தெரிய வந்தன. அமிழ்தம் போன்ற அக்கனியைத் தனக்களித்த அதியமானை ஔவையார் மிகவும் பாராட்டி, நெடுங்காலம் வாழ்க என்று வாழ்த்தினுர்.

பயிற்சி

1. விடை எழுது :

1. அதியமான் எந்த நாட்டு அரசன்? அவனது முழுப் பெயர் என்ன?
2. அதியமான், ஔவையாரிடம் ஏன் அதிகமான பற்றுக் கொண்டிருந்தான்?
3. அதியமான் எவ்வாறு நெல்லிக்கனியைப் பெற்ருன்? அக்கனியின் சிறப்பு யாது?
4. அதியமான் நெல்லிக்கனியை ஏன் ஔவையாரிடம் கொடுத்தான்?

2. கருத்து முற்றுப்பெருத குறைத் தொடர்களை எச்சத் தொடர்கள் என்று சொல்வர்.

கீழுள்ள எச்சத் தொடர்களை முடி.

1. கேட்போருக்கு இல்லையென்னுது ......
2. அதியமான் அக்காலத்தில் ஓர் ஒப்பற்ற ......
3. நெல்லிக்கனியைப் பறித்து ......
4. நெல்லிக்கனியின் சிறப்புக்களை ஔவையாரிடம் கூறினுல் ......

30. பனை (பாட்டு)

காயினில் குளிர்மை தந்தாய் ;
கடுஞ்சுரம் வாழ்ந்திட் டாலும்
தோய்சுவைக் கனியால் எந்த
உள்ளமும் தொட்டாய் ; ஏழை
வேய்ந்திடு கூரை யானாய் ;
விசிறினாய் புழுக்கம் நீங்க ;
பாயானாய் ; தடுக்கு மானாய் ;
பல விதக் கூடை யானாய் ! 1

காலிகள் மேயா வண்ணம்,
களைமிகுந் தழிக்கா வண்ணம்,
வேலியைக் கட்டிப் போற்றி
விருப்புடன் வளர்த்தார் உண்டோ ?
பாலிலா யாரும் அற்ற
குழவிநீ ! பனையே ! என்றும்
ஏலவே உதவு கின்றாய் !
உன்குணம் எவர்பெற் றாரே ! 2

—வாணி தாசன்.

பயிற்சி

விடை எழுது :

1. பனைமரம் நமக்குத் தரும் பொருள்கள் யாவை ?
2. பனையை யாரும் இல்லாத குழந்தை என்றது ஏன் ?

27. ஞமலி போல் வாழேல்

மாணவர்களே! நீங்கள் பாரதியாரின் புதிய ஆத்திசூடியைக் கற்றிருக்கிறீர்களா? கற்றிருந்தால், அப்புதிய ஆத்தி சூடியில் உள்ள 'ஞமலிபோல் வாழேல்' என்பது உங்கள் நினைவிற்கு வருகிறதா? அதன் பொருளை இங்கு ஆராய்வோம்.

நாய் தனக்குப் பிறர் செய்த நன்றியை என்றும் மறவாது. தன்னை வளர்ப்பவர்கள் அடித்தாலும், துன்புறுத்தினாலும் அவர்கள் செய்யும் துன்பத்தைப் பொருட்படுத்தாது, அவர்கள் முன்பு தனக்குச்செய்த உதவியையே நினைத்து, வாலையாட்டித் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும். அதனால்தான் 'நாய் நன்றி மறவாது' என்று கூறுவார்கள்.

ஆனால், விலங்குகளிலெல்லாம் மிகவும் பெரியதாகிய யானையிடம் நன்றி மறவாப் பெருங் குணம் இல்லை. அதனைப் பல ஆண்டுகளாக வளர்த்து, அதற்குப் பல உதவிகளையும் செய்து, அதனோடு நாள்தோறும் பழகுகின்ற பாகன் ஒரு தவறு செய்து விட்டாலும் அது மிகுந்த சினம் கொள்ளும். அவன் செய்த உதவிகளை யெல்லாம் மறந்துவிடும்; தீமையை மட்டுமே நினைத்து அவனைக்கொன்றுவிடும். ஆகவே, யானை நன்றி கொல்லும் தன்மையுடையது என்பார்கள். அதனால்தான் 'நாலடியார்' என்ற நூலில், யானை போன்றவர்களிடம் நட்புச் செய்யக்கூடாது என்றும், நாய் போன்றவர்களிடம் நட்புச் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. யானை போன்றவர்களிடம் நாம் நட்புச் செய்தால் அவர்கள் நாம் செய்த எல்லா உதவிகளையும் மறந்துவிட்டு, நாம் செய்த சிறு தவற்றிற்காக நமக்குத் துன்பம் செய்வார்கள். நாய் போன்றவர்களிடம் நட்புச் செய்தால் நாம் அவர்களுக்குச் செய்த நன்மைகளை நினைத்து நாம் செய்த தவறுகளை மறப்பார்கள்.

நாலடியார், நாய் நற்குணம் உடையது என்று கூறுகிறது. பாரதியாரோ, நாய் மிகவும் இழிந்த குணம் உள்ளதாதலால் அதைப்போல் வாழாதே என்கிருர். நாயிடம் ஏதோ இழிவான குணம் இருப்பதைப் பாரதியார் கண்டிருக்கிருர். அந்த இழிகுணம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

நாய், தன்னை வளர்ப்பவர்கள், தனக்கு உதவி செய்பவர்கள், அவர்களோடு பழக்கமுள்ளவர்கள் ஆகிய எல்லோரிடமும் அன்பாக இருக்கும். ஆனுல், தன்னைப் போன்ற இன்னெரு நாயிடம் அது அன்போ, நன்றியோ காட்டுவதில்லை. மாருகப் பொருமையும், பகைமையும் கொள்ளுகிறது. செல்வர்களின் வீடுகளில் உள்ள நாய், பாலுஞ் சோறும் தின்றுவிட்டு மெத்தையில் படுத்திருக்கும். தெருவில் இன்னெரு நாய் எங்காவது எச்சிலையைக் கண்டு விட்டு ஓடும். அதைக்கண்டவுடனே படுத்திருக்கும் நாய் பொருமை கொண்டு குரைக்கும்; முடிந்தால் ஓடிக் கடிக்கும். எல்லோரிடமும் நன்றியுடன் பழகும் நாய்க்குத் தன் இனத்திடம் பொருமையும், பகையும் கொள்ளும் இழி குணமும் இருக்கிறது.

மக்கள் சிலரிடம், நாயிடம் காணப்படும் இரண்டு குணங்களும் உள்ளன. அவர்கள் எல்லோரிடமும் மிகவும் அன்பாகப் பழகுவார்கள். மற்றவர்களுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் பதிலுதவியை எதிர் பார்க்காமல் செய்வார்கள். ஆனுல், தங்களோடு வாழ்கின்ற ஒருவர் நன்ருக வாழக் கண்டால் பொறுக்க மாட்டார்கள்; அவர்களை எப்படியாவது கெடுக்கவே பாடுபடுவார்கள்.

நாம் நாயிடம் உள்ள 'நன்றியுடைமை' என்னும் நற்குணத்தை வைத்துக்கொண்டு, 'இனத்தார் வாழப் பொறுக்காமை' என்ற தீயகுணத்தை அகற்ற

வேண்டும். இக்கருத்தை நமக்குத் தெரிவிக்கவே பாரதியார் ‘ஞமலி போல் வாழேல்’ என்ருர்.

பயிற்சி

1. விடை எழுது:

1. நாய் நன்றி மறவாது என்று ஏன் கூறுகிருர்கள்?

2. யானை நன்றி கொல்லும் தன்மையுடையது என்பதை எவ்வாறு அறிகிருேம்?

3. எத்தன்மையரிடம் நட்புச் செய்யவேண்டும்? எத்தன்மையரிடம் நட்புச் செய்யக் கூடாது?

4. நாயிடம் காணப்படும் இழி குணம் யாது?

5. ‘ஞமலி போல் வாழேல்’—இதைக் கூறியவர் யார்? ஏன் அவ்வாறு கூறியுள்ளார்?

2. தொடரில் அமைத்து எழுது:

ஆராய்வோம், பொருட்படுத்தாது, மாருக, பதிலுதவி, பொறுக்க, பாடுபடுவார்கள்.

3. பிரித்து எழுது:

வாலையாட்டி, விலங்குகளிலெல்லாம், வேண்டுமென்று, கூறப்பட்டிருக்கிறது, உள்ளதாதலால், பதிலுதவி.

4. கீழுள்ள தொடர்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களை எடுத்து விட்டு அதே பொருளுள்ள வேறு சொற்களை எழுது:

1. பாரதியார் இயற்றிய **ஆத்திசூடியைக் கற்றீர்களா**?
2. நாய் பிறர் தனக்குச் செய்த நன்றியை மறவாது.
3. விலங்குகளில் மிகவும் பெரியது யானை.
4. யானை மிகுந்த சினம் கொள்ளும்.
5. நாயிடம் வேருெரு இழிந்த குணமும் உண்டு.

28. வாழும் வழி

காபூல் என்னும் நகரத்தின் அருகில் ஒரு பெரிய காடு இருந்தது. பல்லாண்டுகளுக்கு முன்னர் அக் காட்டில் இருந்த ஒரு பெரிய மரத்தின் பொந்தில் கிளி யொன்று வாழ்ந்திருந்தது. ஒரு நாள் அப்பறவை அண்மையிலிருந்த திராட்சைத் தோட்டம் ஒன்றிற் குச் சென்று நிறையத் திராட்சைப் பழங்களைத் தின்றுவிட்டு வந்தது. அதனால் அது மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டு நாவினால் சப்புக் கொட்டிக் கொண்டிருந்தது.



கிளி வாழ்ந்த மரத்திற்கருகிலிருந்த புதரில் ஒரு நரி வாழ்ந்தது. பறவையின் சப்புக் கொட்டும் ஒலி புதரிலிருந்த நரியின் செவிகளில் விழுந்தது. உடனே நரி புதரிலிருந்து வெளியே வந்து கிளியைப் பார்த்து, "என்ன தின்கிறாய்?" என்று கேட்டது. அதற்குக் கிளி, "நரியண்ணா! நான் இன்று திராட் சைப் பழம் தின்று வந்தேன்; அது இன்னும் என் நாவில் இனித்துக் கொண்டிருக்கிறது; அதனாற்றான்

சப்புக் கொட்டிக்கொண்டேயிருக்கிறேன்,'' என்றது. அதனைக் கேட்டதும் நரியின் நாவிலும் எச்சில் ஊறத் தொடங்கியது ; திராட்சைப் பழம் தின்னவேண்டும் என்னும் ஆவல் அதற்கும் உண்டாயிற்று.

உடனே நரி கிளியிடமிருந்து அத்திராட்சைத் தோட்டத்தைப் பற்றிய தகவல்களை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டது. மறுநாள் நரி அத் தோட்டத்திற்குச் சென்றது. அங்கிருந்த ஒரு மரத் தின் மேல் திராட்சைக் கொடி படர்ந்திருப்பதையும், அதில் திராட்சைப் பழங்கள் குலைகுலையாய்த் தொங்கு வதையும் கண்டது. நரி அப்பழங்களைப் பறிக்கப் பலவகைகளிலும் முயன்றது. முன்னங்கால்களை மேலே தூக்கி எட்டி எட்டிப் பார்த்தது. பின்னங் கால்களால் மண்ணையும், கல்லையும் மேல் நோக்கி வீசிப் பார்த்தது. முன்னங்கால்களைத் தரையில் ஊன்றிக்கொண்டு பின்னங்கால்களை மேலே தூக்கி எட்டி உதைக்க முயன்றது ; குட்டிக்கரணம் போட்டு விழுந்ததே தவிரப் பழம் ஒன்றும் அகப்படவில்லை. கடைசியில் எட்டி எட்டிக் குதித்தும் பார்த்து விட்டது. பழம் கிட்டவில்லை. ஏமாற்றமும், களைப்பும் அடைந்த நரி தன் முயற்சிகளை நிறுத்திக்கொண்டு வயல் பக்கம் சென்றது ; அங்குக் கிடைத்த நண்டு, நத்தை, மீன் முதலியவற்றை வயிருரத் தின்று ஏப்பம் விட்டுக்கொண்டே தன் இருப்பிடத்தை யடைந்தது.

ஏப்பத்தைக் கேட்ட கிளி, பொந்திலிருந்து வெளியே வந்தது ; ''என்ன நரியண்ணே ! ஏப்பம் விடுவதைப் பார்த்தால் தோட்டத்தில் திராட்சைப் பழமே மிச்சம் இருக்காது போல் தோன்றுகிறதே,'' என்று கேட்டது. உடனே நரி, ''சீ ! சீ ! அந்தப் பழம் புளிக்கும் ; அதை எவன் தின்பான் ?,'' என் றது. அதனைக் கேட்ட கிளி, ''திராட்சைப் பழம் புளிக்குமா,'' என்று திகைப்புடன் கேட்டது. ''புளிக்காமலென்ன ? எட்டி எட்டிப் பார்த்தேன் ;

எட்டவே இல்லையே,'' என்றது நரி. “அதற்காக, அந்தப் பழம் புளிக்கும் என்பதா?'' என்று கிளி வினவியது.

“பின், வேறு எப்படிச் சொல்வதாம்? எட்டாத கனியை எண்ணி எண்ணிக் கொட்டாவி விட்டுக் கொண்டே இருந்தால் அங்கேயே பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான். எளிதில் கிடைக்கக்கூடிய நண்டு நத்தைகளும் எனக்குக் கிடைத்திருக்க மாட்டா. ‘கிட்டாதாயின் வெட்டென மற’ என்றபடி எனக்குக் கிடைக்காத அக் கனியை மறந்தேன்; மறப்பதற்காக வெறுத்தேன்; கிடைத்த உணவே நல்லது என்று உண்டேன்; மகிழ்கிறேன்,'' என்று நரி ஒரு சிறு சொற்பொழிவே செய்து முடித்தது.

அனைத்தையும் கேட்ட கிளி தலையசைத்துக் கொண்டே “நல்ல வேலை செய்தீர்கள் நரியண்ணா! சிறந்த பொருள்களை அடைவதற்குத் தகுந்த முயற்சி செய்யவேண்டியதுதான்; அது வெற்றி தராவிட்டால் முயற்சியை மாற்றிக்கொள்ள வேண்டியதுதான். அதுவே வாழும் வழி,'' என்று கூறிப் பறந்து சென்றது.

பயிற்சி

விடை எழுது:

1. கிளி சப்புக் கொட்டியது ஏன்?
2. “என்ன தின்கிறாய்'' என்ற நரிக்குக் கிளி கூறிய விடை யாது?
3. திராட்சைக் கனியைப் பறிக்க நரி செய்த முயற்சிகள் யாவை?
4. “திராட்சை புளிக்குமா'' என்ற கிளிக்கு நரி என்ன விடை கூறியது?
5. நரி செய்த சொற்பொழிவின் கருத்து யாது?
6. நரியின் செயல் சரியா? தவறா?
7. எது வாழும் வழி?

29. மூன்று மூடர்கள் (பாட்டு)

வெள்ளி முளைத்திடும் வேளையிலே—சோலைப்
புள்ளிசை பாடிடும் நேரத்திலே
மெள்ள எழுந்து வெளிவந்தான்—மொட்டை
வெள்ளெலி யொன்றினைக் கண்டுவிட்டான்.
தட்டுத் தடுமாறி உட்புகுந்து—தூங்கும்
கட்டையைத் தட்டி எழுப்பிவிட்டு
கட்டையா வெள்ளெலி கண்டாயோ—என்று
மொட்டையன் கூறிடக் கட்டையனும்
காது குடைய இறகொன்று—அதில்
தோதாய்ப் பிடுங்கிவா என்றுரைத்தான்.
கட்டையா உன்புத்திக் கட்டையடா—அது
குட்டி உடும்போ இறகொடிக்க
என்று உரைசெய்த மொட்டையனைக்—கட்டை
ஒன்றும் அறியாத மூடனென்றான்.
கட்டையும் மொட்டையும் பேசியதைக்—கேட்ட
குட்டை என்பான் குதித்தெழுந்து
வெள்ளை எலியும் உடும்பினையும்—நீங்கள்
துள்ளும் முயலென்று எண்ணினீரோ
சற்றும் அறிவற்ற மூடர்களா—என்று
சாற்றி அவனும் நகைத்திருக்க
வாலைக் குழைத்தெலி வந்திடவே—அவர்
மூலைக் கொருவராய் ஓடலானார்.

—நன்னன்.

பயிற்சி

1. விடை எழுது:

கட்டையன், மொட்டையன், குட்டையன்—மூவரும் மூடர்கள் என்பது எவ்வாறு தெரிகிறது?

2. தொடரில் அமைத்து எழுது:

தட்டுத்தடுமாறி, தோது, எண்ணினீர், சாற்றி.

30. கஞ்சனும், வஞ்சனும்

ஓரூரில் கஞ்சன் ஒருவன் இருந்தான். அவனிடம் நிறையப் பணம் இருந்தது. அவன் அப்பணத்தில் ஒரு செல்லாக் காசைக்கூடச் செலவழிக்க மாட்டான். அப்பணம் முழுவதையும் ஒரு கந்தல் துணியில் வைத்து மூட்டையாகக் கட்டித் தன் கையிலேயே வைத்திருந்தான். ஊர்தோறும் சென்று பிச்சையெடுத்து உண்டு, துறவியைப் போல் வாழ்ந்து வந்தான். அவனை எல்லா மக்களும் ஏழைத் துறவி என்றே நம்பி, அவனுக்குச் சோறு இட்டு ஆதரித்து வந்தனர்.

அக்கஞ்சத் துறவியிடம் பணம் இருப்பது ஒரு பிராமணனுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவன் அத்துறவியிடமிருக்கும் பணத்தைக் கவர்ந்து கொள்ள எண்ணினான். அந்த வஞ்சப் பிராமணன் ஒருநாள் அக்கஞ்சத் துறவியிடம் சென்றான். துறவியை வணங்கிய வஞ்சன், "ஐயா! நான் ஒரு பாவி. என் பாவங்களிலிருந்து மீளும் வழி தெரியாமல் திகைக்கிறேன். மாபெருந் துறவியாகிய தாங்கள் எனக்கு அறிவுரை கூறி என்னைக் கடைத்தேற வைக்கவேண்டும்" என்று கூறித் துறவியின் காலில் விழுந்தான். கஞ்சனும் வஞ்சனுடைய சூது எண்ணத்தை அறியாமல் அவனைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். கஞ்சனிட்ட வேலைகளையெல்லாம் செய்து கொண்டு வஞ்சன் கந்தல் மூட்டையிலேயே கண்ணாயிருந்தான்.

ஒரு சமயம் கஞ்சனும் வஞ்சனும் சேர்ந்து வேறோர் ஊரிலிருந்த செல்வர் ஒருவர் வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு விலா எலும்பு கைகளில் இடிக்கும் வரைச் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். வரும்போது வஞ்சன் ஒரு துரும்பை எடுத்துத் தன் தலை மீது வைத்துக்கொண்டு வந்தான். நெடுந் தொலைவு

வந்த பிறகு வஞ்சன் தன் தலையிலிருந்த துரும்பை எடுத்துப் பார்த்துவிட்டு "அடிகளே! இது நமக்கு உணவிட்டவரின் வீட்டிலிருந்து என் தலையில் ஒட்டிக் கொண்டு வந்துவிட்டது. இதை அவரிடம் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன். அன்னமிட்ட வீட்டில் கன்னமிடக் கூடாது அல்லவா? உத்தரவு கொடுக்க வேண்டும்," என்று தன் குருவை வணங்கிக் கேட்டான். கஞ்சனும் சீடனின் நல்ல குணத்தைக் கண்டு வியந்து, "சரி, சென்று வா" என்ருன். வஞ்சன் சிறிது தொலைவு ஓடி ஒரு செடியின் மறைவில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்து துரும்பை எறிந்து விட்டுத் திரும்பி ஓடி வந்து சேர்ந்தான்.

பின்னும் சிறிது தொலைவு நடந்து சென்றனர். சீடனை முழுதும் நம்பிவிட்ட கஞ்சன் தன் கந்தல் மூட்டையை அவனிடம் கொடுத்து வைத்திருக்கச் சொல்லிவிட்டுத் தண்ணீர் குடிக்கக் கருதி ஒரு குளத்திற்குச் சென்ருன். அங்கே இரு ஆட்டுக் கிடாக்கள்

ஒன்றோடொன்று முட்டிச் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அவற்றின் மண்டையுடைந்து இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. எனினும் அவை சண்டையை நிறுத்தவில்லை. அந்த இரத்தத்தைக் குடிக்க விரும்பிய ஒரு நரி அவைகளுக்கு இடையே போய் இடிபட்டுச் செத்தது. கஞ்சன் அதைப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் இருந்துவிட்டான். "இது சமயம் தவறினல் மறுசமயம் வாய்ப்பதரிது" என்று கருதிய வஞ்சன், தன் கையிலிருந்த மூட்டையுடன் ஓட்டம் பிடித்தான்.

திரும்பி வந்த கஞ்சன், வஞ்சனையும் மூட்டையையும் காணுமல் மனம் பதறினன். "ஐயோ! நம்பி மோசம் போனேனே. வஞ்சனை உண்மை மாணவனுக நம்பி ஏமாற்ற மடைந்தேனே. தேனீ தேனைத் திரட்டுவதுபோல் பணத்தைச் சம்பாதித்து இத்தடியனிடம் கொள்ளை கொடுத்தேனே" என்று கதறினன்.

பயிற்சி

1. விடை எழுது:

1. கஞ்சன் எவ்வாறு பொருள் சேர்த்தான்? அதை எங்கே வைத்திருந்தான்?

2. வஞ்சன் ஏன் கஞ்சனிடம் வந்து சேர்ந்தான்?

3. வஞ்சன் தன்னை உண்மையுள்ளவன் என்று கஞ்சனை நம்ப வைத்தது எவ்வாறு?

4. நீ இக்கதையை உன் சொந்தத் தொடர்களால் சொல்.

2. தொடரில் அமைத்து எழுது:

ஊர்தோறும், ஆதரித்து, கடைத்தேற, அறிவுரை, கண்ணுயிருந்தான், கன்னமிடு, கருதி.

31. நூற்றுண்டு விழா



சென்னையில் உள்ள சைதாப்பேட்டையில் ஆசிரியர் கல்லூரி என்று ஒரு கல்வி நிலையம் இருக்கிறது. அது 1856-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அக் கல்லூரிக்கு 1956-ஆம் ஆண்டுடன் நூறு ஆண்டுகள் முடிந்தன. ஆகவே அவ்வாண்டு பிப்ரவரித் திங்கள் 29-ஆம் தேதியும், மாச்சுத் திங்கள் 1, 2-ஆம் தேதிகளும் ஆகிய மூன்று நாட்கள் அக்கல்லூரியின் நூற்றுண்டு விழா மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

அக் கல்லூரியில் பல்வேறு வகையான படிப்புக்கள் உள்ளன. மூன்றரை வயதுள்ள குழந்தைகளுக்கான குழந்தைக் கல்வி நிலையமும், ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் உள்ள துவக்கப் பள்ளியும் அங்கு உண்டு. அதற்குக் 'கிண்டர் கார்டன்' பள்ளி என்று பெயர். மாதிரி உயர்நிலைப் பள்ளி

என்று ஓர் உயர்நிலைப் பள்ளியும் அங்கு இருக்கிறது. மற்றும், தமிழ்ப் புலவர்களுக்கும், பி. ஏ. முதலிய பட்டம் பெற்றவர்களுக்கும் அங்கு ஆசிரியப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. இவை தவிர, மரவேலை, நெசவுத் தொழில் முதலிய கைத்தொழிற் படிப்புக் களும், முதியோர் இரவுப் பள்ளியும் அங்கு நடை பெறுகின்றன. மாணவர்கள் தங்குவதற்கான ஒரு விடுதியும் அங்கிருக்கிறது. இவையனைத்தும் சேர்ந்து ஆசிரியர் கல்லூரி ஓர் அழகிய ஊர்போல் விளங்கு கிறது.

இவ்வளவு பெருமை வாய்ந்த அக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்குப் பல அறிஞர்களும், நாட்டை ஆளும் அமைச்சர்களும், பொதுமக்களும் வந்து சிறப்பித்தனர். மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும், மற்றவர்களும் ஆயிரக் கணக்கில் விழாப் பந்தலில் கூடியிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. விழாவுக்காக முன்னதாகவே மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, கட்டுரை எழுதும் போட்டி முதலியன நடத்தி அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு விழாவில் பரிசுகள் கொடுத்தார்கள்.

விழாவின் முதலிரண்டு நாட்களில் பல அறிஞர் கள் சொற்பொழிவு செய்தனர். இனிமையான தமிழ்ப் பாடல்கள் பலவற்றை மாணவர்கள் பாடினர். இரவு நேரங்களில் அருமையான நாடகங்கள் நடந்தன. கல்லூரிக் கட்டடம் மின்சார விளக்குகளின் ஒளி யால் பேரழகு பெற்றுத் திகழ்ந்தது.

மூன்றும் நாள்விழா விளையாட்டு விழாவாக நடைபெற்றது. அன்றும் பல அமைச்சர்களும், அறிஞர்களும் வந்திருந்தனர். ஆண், பெண் மாணவரனைவர்க்கும் பல்வேறு வகைப்பட்ட விளை யாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அன்று இருள்

சூழ்ந்த பிறகு மாணவர்கள் விளக்குகளையும், தீப் பந்தங்களையும், மெழுகு வத்திகளையும் ஏந்திக் கொண்டு பல்வகைப் பயிற்சிகளைச் செய்து காட்டினர். இறுதியில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன.

இவ்விழாவில் குறிப்பிடத் தகுந்த சிறப்பு வாய்ந்தது அங்கு அமைக்கப்பட்டிருந்த கல்விக்கண் காட்சியே யாகும். கல்லூரி முதல்வரும், மற்றைய ஆசிரியர்களும், மாணவர்களும் அரும்பாடுபட்டு அக்காட்சியை மிகச்சிறந்த முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். ஒரு முறை அக்காட்சியைச் சுற்றிப் பார்ப்பதற்குக் குறைந்தது மூன்று மணி நேரம் தேவைப்பட்டது. ஆயிரக் கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் நாள்தோறும் அங்கு வந்து அக்கல்விக் கண்காட்சியினைக் கண்டு களித்தனர். அதைக் கண்டோர் கல்வி பற்றிய பல அரிய கருத்துக்களைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருப்பர் என்பது திண்ணம்.

பயிற்சி

1. விடை எழுது :

1. நூற்றாண்டு விழா என்றால் என்ன?
2. ஆசிரியர் கல்லூரியில் என்னென்ன பிரிவுகள் உள்ளன?
3. மூன்றாம் நாள் விழாவை விளக்கி எழுது.
4. கல்விக் கண்காட்சியினால் ஏற்படும் பயனை எழுது.

2. தொடரில் அமைத்து எழுது :

நிலையம், பல்வேறு வகை, பயிற்சி, விடுதி, கண்கொள்ளாக் காட்சி, கண்காட்சி, கண்டோர், திண்ணம்.

3. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுள்ள வேறு சொற்களை எழுது :

1. நூற்றாண்டு விழா **மிகவும்** சிறப்பாக நடந்தது.

2. துவக்கப் பள்ளி ஒன்றும் அங்கு இருக்கிறது.

3. விழாவிற்குப் பல அமைச்சர்கள் வந்திருந்தனர்.

4. இரவு நேரங்களில் பல நாடகங்கள் நடந்தன.

5. இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

4. கீழுள்ள சொற்றொடர்கள் தவருக உள்ளன. அவற்றைத் திருத்தமாக எழுதிக் காட்டு:

எங்கள் ஊரில் சென்ற ஆண்டு, விழா ஒன்று நடக்கிறது. அதற்கு நான் போவேன். என் தகப்பனர் அதைப்பற்றி என்னிடம் கூறிற்று. என் தாயாரும் என்னுடன் வருவதாகக் கூறினன். அங்கே பல மாணவன் விளையாடுவான். பிறகு நாங்கள் வீட்டுக்கு வருவேன். என்னுடன் அவர்களும் சாப்பிடுவீர்கள். சாப்பிட்ட பிறகு என் தாயார் தூங்கப் போவேன்.

32. அரசைத் துறந்த அடிகள்

(நாடகம்)

இடம்: இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் அரசவை.

இருப்போர்: நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன், இளங்கோ, அமைச்சர் முதலியோர்.

சேரலாதன்: அமைச்சரே! நான் முடிசூடி அரசை ஏற்று நெடுங்காலமாயிற்று. எத்தனையோ போர்களைச் செய்து வெற்றி பெற்றிருக்கிறேன். இமய மலை வரையில் சென்று எல்லா அரசர்களையும் அடக்கி இமயமலையில் நமது விற்கொடியையும் பொறித்து விட்டு வந்தேன்.

அமைச்சர்: தங்களின் புகழ் உலகம் முழுவதும் பரவி யிருக்கிறது, மன்னவா. தங்களின் அரசாட்சி முறையைக் கேள்வியுற்று வேற்று நாட்டு அரசர்களனைவரும் வியக்கிறார்கள்.

சேரலாதன்: ஆயினும், என் உள்ளம் இப்போது ஓய்வையே விரும்புகிறது. அரசுப் பொறுப்பிலிருந்து விரைவிலேயே விலகி ஓய்வு பெற விரும்புகிறேன்.

செங்குட்டுவன்: தந்தையே! தாங்கள் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து அரசாள வேண்டும் என்பது என் விருப்பம்.

இளங்கோ: தாங்கள் இதற்குள் அரசைத் துறப்பது எனக்கும் விருப்பமில்லை.

சேரலாதன்: என்னருமை மக்களே! நான் இன்னும் பல ஆண்டுகள் உயிர்வாழ்வேன்; ஐயமில்லை. ஆனால் நான் வாழும் வரை நானே அரசனாக இருக்க விரும்பவில்லை. உங்களுக்குப் பயிற்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகவே உங்களை எப்போதும் என் அருகில் வைத்துக் கொண்டு அரசியல் அலுவல்களைக் கவனிக்கிறேன்.

(காவலன் வந்து வணங்கி)

காவலன் : மன்னர் மன்ன ! வாழ்க ! ஒரு சோதிடன் தங்களைக் காண வேண்டி வாயிலில் காத்திருக்கிருன்.

சேரலாதன் : அவனை வரவிடு.

[காவலன் வணங்கிச் செல்லவும், சோதிடன் புகுதல்]

சோதிடன் : இமயத்தின்மேல் வெற்றிக் கொடி நாட்டிய வேந்தர் வேந்தே ! வாழ்க !

சேரலாதன் : வருக ! நீ என்னைக் காண விரும்பிய தற்கு ஏதேனும் சிறப்பான காரணம் இருக் கிறதா ?

சோதிடன் : மன்னவா ! தங்களைக் கண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவே வந்தேன். வேறு காரணம் ஏது மில்லை. ஆனல், இங்கு வந்து தங்களையும், தங்கள் மக்கள் இருவரையும் கண்ட பிறகு தங்களிடம் கூறவேண்டிய முக்கியமான செய்தி யொன்று தோன்றுகிறது.

சேரலாதன் : தயக்கமின்றிக் கூறலாம்.

சோதிடன் : (செங்குட்டுவனையும், இளங்கோவையும் ஏற இறங்கப் பார்த்துவிட்டு) மன்னர் பொருமானே ! நான் இப்போது உரைக்கப் போகும் செய்தி தங்களுக்குச் சினம் உண்டாக்கக் கூடும். எனி னும் சோதிட அறிவால் என் கருத்தில் தோன்றி யதைக் கூறுகிறேனுதலால் என்னை மன்னிக்க வேண்டும்.

சேரலாதன் : அஞ்சாமல் கூறுக.

சோதிடன் : தங்களின் மக்கள் இருவரிலும் இளைய வரே தங்களுக்குப் பின் அரசாளத் தகுந்தவர். அதற்கு வேண்டிய எல்லா அறிகுறிகளும் அவ ரிடம்தான் உள்ளன. மூத்தவரிடம் அவை காணப்படவில்லை.

[அரசன் முதலிய அனைவரும் திகைக்கின்றனர். செங் குட்டுவன் தலை குனிந்து கொள்கிருன். இளங்கோ கண் சிவக்கச் சினத்துடன் எழுகிருன்.]

இளங்கோ : தந்தையே! இச் சோதிடன் கூறியதை ஏற்க வேண்டாம். அண்ணனிடம் இல்லாத திறமை என்னிடம் எதுவும் இல்லை. மேலும், மூத்தவனிருக்க இளையவன் அரசாளு

வது நமது பரம்பரையிலேயே இல்லாத வழக்கம். எனவே, எனது அருமை அண்ணவே அரசர். அவர் வாழ்க!

சேரலாதன் : இளங்கோ! அண்ணன் திறமையுடையவனாக இருக்கலாம். சோதிடப்படி நீதான் அரசாள வேண்டுமென்றால் அதனை நீ மறுக்கலாமா?

செங்குட்டுவன் : ஆம் தம்பி! நீ வேறு, நான் வேறா? நீயே அரசாள வேண்டும்.

இளங்கோ : அண்ணா! அண்ணா!! தாங்களுமா இவ்விதம் பேசுகிறீர்கள்? அடுக்காது. இது அரச நீதியும் ஆகாது. இவ்வளவெல்லாம் கூறு

கின்ற சோதிடனுக்கு என் உள்ளத்தில் இருக்கும் எண்ணம் ஏனோ தெரியவில்லை ?

சேரலாதன் : உன் உள்ளத்தில் உள்ள எண்ணம் என்ன இளங்கோ ?

இளங்கோ : நான் நெடுநாட்களாகத் துறவியாகப் போகவேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன். அப்போதுதான் என் அருமைத் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்ய முடியும் என்பது என் கருத்து. அதற்கான காலமும் இன்று வந்தது. இன்றே, இப்போதே யான் துறவியானேன். எனக்கு அரசும் வேண்டாம்; செல்வமும் வேண்டாம். நான் தனிமையான ஓர் இடத்திற்குச் செல்கின்றேன். அன்புள்ள தந்தையே! அருமை அண்ணா! அமைச்சர்களே! நான் சென்று வருகிறேன். வாழ்க சேரப் பேரரசு !

செங்குட்டுவன் : தம்பீ! தம்பீ!! என்ன காரியம் செய்து விட்டாய்? எங்கே செல்கிறாய்? நீ போன பிறகு நான் இங்கிருந்து அரசாள்வேன் என்று நினைத்தாய்? நானும் உன்னோடு வருகிறேன்.

சேரலாதன் : ஐயோ ! இளங்கோ !! உன் எண்ணத்தை மாற்றிக் கொள். நீ அரசாளாவிட்டாலும் உன் அண்ணனுக்குத் துணையாகவேனும் வாழக்கூடாதா? நீ இல்லாவிட்டால் அவன் மனம் நிம்மதியாக இருக்காதே.

அமைச்சர் : ஆம்! மன்னர் கூறுவது முற்றிலும் பொருத்தமானது. இளவரசர் செங்குட்டுவன் அரசராகட்டும். இளையவராகிய தாங்கள் அவருடனிருந்து அவருக்குப் பல வகையிலும் உதவி செய்யலாம்.

இளங்கோ : அண்ணா !

செங்குட்டுவன் : தம்பீ!

[இருவரும் கட்டித் தழுவிக் கொள்கின்றனர். சேரலாதன் முதலிய அனைவரும் மகிழ்கின்றனர்.]

செய்யுட் பகுதி

1. நல்வழி

சாதி இரண்டொழிய வேறில்லை, சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. 1

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 2

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் !—வேண்டா
நமக்கு அதுவழியே நாம்போம் அளவும்
எமக்(கு)என்னென்(று) இட்(டு)உண்(டு) இரும். 3

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய் ;
இருநாளுக்(கு) ஏலென்றால் ஏலாய் ;—ஒருநாளும்
என்நோ(வு) அறியாய் ; இடும்பைகூர் என்வயிறே !
உன்னோடு வாழ்தல் அரிது. 4

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 5

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம். 6

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 7

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங்(கு) இல்லை—சுரந்தமுதம்
கற்று தரல்போல் கரவா(து) அளிப்பரேல்
உற்று(ர்) உலகத் தவர். 8

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 9

பூவாதே காய்க்கும் மரமு(ம்)உள ! மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே ;—தூவா
விதைத்தாலும் நன்றுகா வித்துளவே பேதைக்(கு)
உரைத்தாலும் தோன்று(து) உணர்வு. 10

—ஔவையார்.

2. நீதி வெண்பா

பகைசேரு(ம்) எண்ணன்கு பற்கொண்டே நன்று
வகைசேர் சுவையருந்து மாபோல்,—தொகைசேர்
பகைவரிட(ம்) மெய்யன்பு பாவித்(து) அவரால்
சுகமுறுதல் நல்லோர் தொழில். 1

ஈக்கு விடம்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே ;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 2

தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாரும் சிலருண்டே ;—ஏமநிழல்
இட்டுமலர் காய்கனிகள் ஈந்துதவும் நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண். 3

ஆயுமலர்த் தேன்வண்(டு) அருந்துவது போலிரப்போர்
ஈயும் அவர்வருந்தா(து) ஏற்றலறம் ;—தூயவிளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றி யரிப்பதுபோல்
அச்சமுற வாங்கல் அகம். 4

பொன்னும், கரும்பும், புகூழ்பாலும், சந்தனமும்,
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 5

தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென்(று) எண்ணியே துன்னற்க;—சேயிழையே!
தண்ணொளிய மாணிக்கம் சர்ப்பம் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு. 6

பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்;—நூலினெறி
உற்றோர் இடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து. 7

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே;—நிந்தைமிகு
தாலநிழல் கீழிருந்தான் றன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். 8

தானறிந்தோ ருக்குதவி தன்னால் அமையுமெனில்
தானுவந்(து) ஈதல் தலையாமே;—ஆனதனால்
சொன்னால் புரிதலிடை; சொல்லியும்பன் னாள்மறுத்துப்
பின்னாள் புரிவதுவே பின். 9

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ? விளம்பு. 10

3. சதகம்

1. குமரேச சதகம்

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
 கூரிரும் புகளை வெல்லும் ;
 கோடாலி தன்னுளே மரமது நுழைந்துதன்
 கோத்திர மெலாம்அழிக்கும் ;
நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
 நண்ணிப்பற வைகளையார்க்கும் ;
 நட்புடன் வளர்த்தகலை மானென்று சென்றுதன்
 நவில்சாதி தனையிழுக்கும் ;
உலவுநற் குடிதனில் கோளர்கள் இருந்துகொண்(டு)
 உற்றுரை யீடழிப்பர்.
 உளவனில் லாமலூர் அழியா(து) எனச்சொல்லும்
 உலகமொழி நிசமல்லவோ ?
வலமாக வந்தர னிடத்தினில் கனிகொண்ட
 மதயானை தன்சோதரா !
 மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
 மலைமேவு குமரேசனே !

—குருபாத தாசர்.

2. அறப்பளீசுர சதகம்

செத்தைபல கூடியொரு கயிருயின் அதுகொண்டு
 திண்கரியை யும்கட்டலாம் ;
 திகழ்ந்தபல துளிகூடி யாருயின் வாவியொடு
 திரளேரி நிறைவிக்கலாம் ;
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடின்
 உடுத்திடும் கலையாக்கலாம் ;
 ஓங்கிவரு கோலுடன் சீலையும் கூடினல்
 உயர்கவிகை யாக்கொள்ளலாம் ;
மற்றுமுயர் தண்டுலத் தோடுதவி(டு) உமிகூடின்
 மல்குமுளை விளைவிக்கலாம் ;
 மனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்கொருவர்
 வாழின்வெகு வெற்றிபெறலாம்.

அற்றகனி யைப்பொருத்(து) அரிபிரமர் தேடரிய
அமலனே ! அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே !

—அம்பலவாணக் கவிராயர்.

3. தண்டலையார் சதகம்

செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலைநீள்
நெறியாரே ! திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர் ; பொல்லாத
கள்ளர்இனி யாரோ ? என்றால்,
கொழுங்கள்ளர் தம்முடன், கும்பிடுங்கள்ளர்,
திருநீறு குழைக்குங் கள்ளர்,
அழுங்கள்ளர், தொழுங்கள்ளர், ஆசாரக்
கள்ளர்இவர் ஐவர் தாமே.

—படிக்காசுப் புலவர்.

4. தேசிங்கு ராசன் கதைப்பாட்டு

[ஆற்காட்டு நவாப்பால் அனுப்பப்பட்ட தூதனாகிய தோன்ற மல்லன் என்பவன் கப்பம் கேட்கத் தேசிங்கு மன்னனிடம் வருதல்.]

சதுர்முன்னுக்கு வந்தானையா தோன்ற மல்லனும்
முழங்கால்சீலை போட்டேஅவனும் முன்னே சலாம்செய்தான்.
பதில்சலாமும் கொடுத்தானையா ராசா தேசிங்கு.
கண்ணாலே கண்டு தோன்றமல்லனை கடுகச்சொல்லலுற்றான்.
" நீ—இங்கேவந்த வயணமென்ன தோன்ற மல்லண்ணா?
எனக்கு—இருபத்திரண்டு வயது இப்போ தாச்சுது,
இத்தனை நாளாய் நவாப்பு சேனைகள் இங்கே வந்ததில்லை;
உயிர்கொடுக்கச் செஞ்சிக்கோட்டைக்கு உகந்து வந்தீரோ?
தைரியங்கொண்டு செஞ்சிக்கோட்டைக்குச் சார்ந்து வந்தீரோ ?
என்சீமையில் நகாருபோட என்ன வலுமைகொண்டீர்?

சல்திசல்தி சொல்லு''மென்றான் ராசா தேசிங்கு.
அந்தப்பேச்சைக் காதிலேகேட்டான் தோன்ற மல்லனும்;
கால்நடுங்கிக் கைநடுங்கிக் காலில் விழுந்தானும்.
"சலாமையா சலாமையா ராசா தேசிங்கு!
நான்—சண்டைக்குவரவில்லை சாடிக்குவரவில்லை ராசா தேசிங்கு.

கோபமில்லாமல் என்னிடபேச்சைச் சற்றே கேளுமையா!
சந்தோசமாக என்னிடபேச்சைச் சற்றே கேளுமையா!
நூற்—றெழுபத்திரண்டு பாளையப்பட்டு நவாப்புக் கானாலும்
செஞ்சிக்கோட்டை பணமும்வரவில்லை ராசா தேசிங்கு;
தோப்புரு பணமும் வேறேகிடக்குது பழஞ்செஞ்சியிலே;
தோப்புரு நிலுவைக்கு வந்தேனையா ராசாதேசிங்கு.''

தேசிங்கின் சினம்

பல்லைப் படபடவென்று கடித்தானையா ராசாதேசிங்கு
கையைத்தூக்கிக் கனைத்துத்தட்டினான் ராசா தேசிங்கு
இனியில்லாத கோபமாச்சுது ராசாவுக் கானாலும்
கோபத்தினாலே அவனைக்கொல்லக் கத்தி எடுத்தானும்.

பார்த்தவுடனே தோன்றமல்லன் பதைத்து விழுந்தானும்;
விழுந்தவுடனே சலாம்செய்து வேண்டிக் கொண்டானும்.
தலையசைத்துத் தோள்நெறித்தான் தாவும் சிங்கம்போல
கண்களையுருட்டிக் கதும்பினானையா காளைச் சிங்கம்போல
"அடா—என்னபேச்சு பேசினாயடா தோன்ற மல்லண்ணா?

நீவந்தாப்போல் நவாப்புவந்தால் நிமிட மிருக்கமாட்டான்
பணமென்றசேதி காதில்கேட்டால் பாய்ந்து வெட்டிடுவேன்
நாளைக்குவரும் நவாப்புசாயபை இன்றைக்கே வரச் சொல்லும்;

ரோசக்காரனானால் நவாப்புசாயபை நொடியில் வரச்
சொல்லும்;
ஆண்பிள்ளையானால் நவாப்புசாயபை விரலை நீட்டச்
சொல்லும்;

மீசையுள்ளவனானால் நவாப்பை வெளியே வரச்சொல்லும்;
கத்தி யெடுக்கிற சிப்பாய்களெல்லாம் தோப்புரு கட்டு
கிறதோ?
தைரியமுள்ளவனானால் நவாப்பைச் சலுதியில் வரச்
சொல்லும்.
கத்திமுனையிலே பணமுந்தாரேன் நாவப்புக் கானாலும்
பரிசைமுனையிலே பணமுந்தாரேன் நவாப்புக் கானா
லும்

போனவருடத்துக் கிந்தவருடம் வரகு விளைந்தது
வரகுவைக்கோல் மெத்தக்கிடக்கு வாரிப் போகச்
சொல்லும்;
கோட்டைவெளில் மணல்கிடக்குது கொண்டு போகச்
சொல்லும்;
ஒட்டைஆயிரம் யானைஆயிரம் ஓட்டி வரச்சொல்லும்;
பொதிகள்போட்டு நவாப்பை எடுத்துப் போகச்
சொல்லும்.''

அந்தப்பேச்சைக் காதிலே கேட்டான் தோன்றமல்லனும்
கால்நடுங்கிக் கைநடுங்கிக் களைத்து விழுந்தானும்.
செத்த பிணம் போலேவிருந்தான் தோன்றமல்லனும்;
மூர்ச்சை தெளிந்து எழுந்தானையா தோன்றமல்லனும்;
சலாம்செய்து திரும்பினானையா தோன்றமல்லனும்.

5. கட்டபொம்மன் பாட்டு

வாராண்டா வாராண்டா வெள்ளைக்காரன் ;
வரட்டும் முரட்டுத் தொப்பிக்காரன்.
தொப்பிக்காரன் குண்டுசெல்லாது—அவன்
துப்புக்கெட்ட குணம் பொல்லாது.
இனி—வெள்ளைக்காரன் படை வெல்லாது—நாம்
எதுத்து வெரட்டினு நில்லாது !
*　　*　　*　　*

அந்தச்சேதி கேட்டுத் தேவமா ரெல்லோரும்
அத்தனைபேரும் இடுப்புக்கட்டி
தந்தைதாய் மாரு பெண்டு பிள்ளைகளுக்கும்
தப்பாமல்தான் புத்திமதிகள் சொல்லி
" இத்தனை நாள்வரைக்கும் பொம்மன் சீமையில்
இருந்து சுகித்தோம் பெண்டுகளே !
கும்மினியார் பகை வந்ததடி ஆக
போர்க்களம் போருேமே பெண்டுகளே !"
*　　*　　*　　*

" இன்றைக்குச் செத்தால் நாளைக்(கு) இரண்டுநாள்
என்ன கூடவரும் தேவமாரே ?
காச்சல் கருப்பாலே செத்தால்—இன்னம்
கண்ணெடுத்து மிகப் பாரார்கள் ;
ரணகளத்தில் போய் மாண்டாக்கால்—இனி
இராச்சியம் எங்குமே பேராகும்."
*　　*　　*　　*

கச்சைக்கட்டி மேலே துண்டுகட்டி—இரு
காலில் செருப்புகள் தும்(பு)—இறுக்கி
வளைதடியுடன் சக்கரமும் இன்னும்
மின்னும் நெறியீட்டிக் கல்லுவெடி
திலகப் பொட்டுகள் தான் அணிந்து இன்னும்
தேவமார் சந்தனம் தான்பூசி
கோட்டை கொத்தளத்தின் மேலே இன்னம்
கூடி அமர்ந்தார்கள் சேர்வைச்சனம்.

இப்படியாகவே சேர்ந்தபின் துரைக்கு
எழுதினான் பதில் காயிதமும் :
"எவ்வளவு மனுசன் காலன் துரை ? அவன்
என்னைச் சந்திக்க வரச்சொன்னான்.
உன்னையும் வந்துநான் சந்திப்புச் செய்யவே
உன்னில் இளப்பமோ காலன் துரை ?
எங்கள் பாட்டனும் செந்தொட்டிப் பாண்டியன்
இச்சணம் சந்திப்புச் செய்ததுண்டோ ?
துலுக்க நாளையில் பிடிபட்டுப் போனாலும்
துரைகள் சந்திப்புச் செய்ததுண்டோ ?
செகவீர பாண்டியன் எங்கள் தகப்பனும்
சிறிதும் சந்திப்புச் செய்ததுண்டோ ?
கருத்த கட்டம நாய்க்கன் வந்து
காணப்போகிறானோ சந்திப்புத்தான் ?
நீயுமல்ல, உங்கள் அப்பனும் அல்ல,
உங்கள் அப்பனைப்பெற்ற பாட்டனல்ல,
ஏழுபேர் கமுட்டித் துரைகள் வந்தாலும்
இனி வருவானோ கட்டபொம்மன் ?
இறந்துபோற வரைக்கும் கேட்டால் பொன்
இனி அரைக்காசு கொடுப்பதில்லை.
வருகிறாப் போலே நானிருந்தால்—இன்னம்
வாடா காலன்துரை சண்டைசெய்ய."

அருஞ் சொற் பொருள்

1. நல்வழி

1. சாற்றுங்கால் - ஆராய்ந்துரைத்தால் ; மேதினி - உலகம்; இட்டார் - வறியவர்க்கு ஒன்றைக்கொடுத்தோர் ; பட்டாங்கு - நீதிநூல்.

2. ஆற்றுப் பெருக்கு அற்று - ஆற்றில் வெள்ளம் இன்றி வற்றி ; அவ் ஆறு - அந்த ஆறானது ; ஊற்றுப்பெருக்கால் - ஊற்று நீரின் மிகுதியால் ; ஏற்றவர் - இரந்தவர்.

3. மாநிலத்தீர் - உலகமக்களே ; வேண்டா - அவ்வாறு அழ வேண்டாம் ; இட்டு உண்டு - பிறர்க்கும் கொடுத்து நீங்களும் உண்டு ; இரும் - வாழுங்கள்.

4. ஏல் - ஏற்றுக்கொள் ; ஏலாய் - ஏற்கமாட்டாய் ; நோவு, இடும்பை - துன்பம்.

5. அரசறிய - அரசரும் அறிந்து மதிக்கும்படி ; வீற்றிருந்த - சிறப்போடிருந்த ; ஏற்றம் - பெருமை ; பழுது - குற்றம் ; பணி - தொழில்.

6. கூடு - உடம்பு ; ஆவி - உயிர்.

7. மதி - அறிவு ; பொல்லனும் - பொல்லாதவனுவான் ; நாடு- இதனை ஆராய்ந்தறிக.

8. அங்கு யாவரும் இல்லை - அம்மரத்தில் யாரும் இல்லை ; கன்று+ஆ=கற்ரு ; அமுதம் - பால் ; கரவாது - மறைக்காமல் ; உற்ருர் - உறவினராவர்.

9. வேழம் - யானை ; கோல் - அம்பு ; பாயாது - தைக்காது ; பாரை - கடப்பாரை ; பாறை - கருங்கற்பாறை ; நெக்குவிடும் - பிளந்துவிடும் ; வெட்டெனவை......வெல்லாவாம் - வன்சொற்கள் இன்சொற்களை வெல்லமாட்டா.

10. மக்களுளும் - மக்களுள்ளும் ; ஏவாதே நின்று - கட்டளை இடாமலிருந்தும் ; தூவா - தூவி ; நன்ருகா - நன்ருக வளராத ; வித்து - விதை ; பேதை - அறிவற்றவன்.

2. நீதி வெண்பா

1. நல்நா - நல்ல நாக்கு ; கொண்டே - துணையாகக் கொண்டே ; வகைசேர் சுவை - பலவகையான சுவைகளையும் ; தொகைசேர் பகைவர் - பல பகைவர் ; பாவித்து - வைத்து.

2. தலையில் எய்தும் - தலையில் உண்டாகும் ; இரும் - கரிய ; பைங்கண் - பசியகண் ; துர்ச்சனர் - தீய குணமுள்ளவர் ; அங்கம் - உடல்.

3. ஏமம் நிழல் இட்டு - இன்பமான நிழலைத்தந்து ; கட்டும்- சூழ்ந்துள்ள ; உடைமுள் - உடை வேலமுள் ; சேமம் - காவல்.

4. ஆயும் - வண்டினுல் ஆராயப்படும் ; ஈயுமவர் . கொடுப்போர் ; ஏற்றல் - அவர் குறிப்பறிந்து பெறுதல் ; கீடம் - புழு ; அகம் - தீது.

5. சின்னம்பட . வருந்தும்படி ; நலிந்தாலும் - அவர் துன் புற்றாலும் ; நயந்து - சிறந்து.

6. சேயிழையே-நல்ல நகைகளை அணிந்துள்ள பெண்ணே ; தரித்தாலும் - வைத்திருந்தாலும் ; நண்ணுவரோ - நெருங் குவரோ ; நாடு - நீ அதனை ஆராய்ந்து பார் ; துன்னற்க - சேரா தொழிக.

7. பாலின் நீர் தீ அணுக - பாலில் கலந்துள்ள நீரைத் தீ நெருங்கிச் சுட ; மேலும் - பின்னும் ; நீர் கண்டு அமையும் - நீரைக் கண்டபின் தன் சினம் அடங்கும் ; நூலின் நெறி உற்றோர்- நூல்கள் கூறும் வழியில் செல்வோர் ; புகல - புகழ்ந்து சொல்ல.

8. நிந்தை - இழிவு ; தாலம் - பனைமரம் ; ஆன் தன்பால் - பசும்பால் ; பார் - அதனை நினைத்துப்பார்.

9. அறிந்தோர் - அறிமுகமானவர்கள் ; அமையும் எனில் - செய்யக் கூடுமாயின் ; சொன்னால் - அவர் கேட்டபின் ; பின் - கடையாகும்.

10. வான் அகத்து - வானில் ; அல் ஆரும் - இரவில் நிறை யும் ; இலகிடினும் - விளங்கினாலும் ; காதலித்து - ஒருவரை யொருவர் விரும்பி ; மானுவரோ - ஒப்பாரோ (மாட்டார்).

3. சதகம்

1. குலம் ஆன - இனமான ; சம்மட்டி குறடு - சம்மட்டி யும் குறடும் ; கோத்திரம் - இனம் ; பார்வை சேர்குருவி-பார்வைக் குருவி ; இது தன்னை வளர்ப்பவனுக்காகப் பிற பறவைகள் தம் இனமென எண்ணி வந்து கண்ணியில் சிக்கச்செய்யும்.

2. திண்கரி - வலிய யானை ; திகழ்ந்த - விளங்கிய ; வாவி - குளம் ; கலை - ஆடை ; சீலை - துணி ; கவிகை - குடை ; தண்டுலம் அரிசி ; மல்கு - நிறைந்த ; விளைவிக்கலாம் - உண்டாக்கலாம் ; அற்ற கனியைப் பொருத்து அரி - மரத்தினின்றும் விழுந்த பழத்தை மீண்டும் அதில் பொருந்தச் செய்த கண்ணன். (பாரதக் கதை).

3. திருடிக்கொண்டு எழும் - திருடிக்கொண்டு ஓடும் ; கொழும் கள்ளர் - செல்வம் இருந்தும் இல்லார் போல் நடிப்போர் ; கும்பிடும் - கும்பிடு போட்டு ஏய்க்கும் ; ஆசாரக் கள்ளர் - ஒழுக் கம் உடையவர் போல் நடித்து மக்களை (நம்பச்செய்து) ஏமாற்றும் கள்ளர்.

147823
TB 031(6) N59
சென்னை 600 008.

912/1192 9:64/C